வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு
மில்க் வைற் சோப்

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 ஆனி திங்கள் 24-ம் நாள் (8—7—1962) ஞாயிற்றுக்கிழமை லயர் 5 | இதழ் 6

# வன்னிநாடும் பறிபோகிறது

## சிங்களத்தில் நியமனக் கட்டளை ஏற்க மறுத்தனர் எழுதுவினைஞர்

### துறைமுக அதிகாரியின் மிரட்டல்

அரசாங்க எழுதுவினைஞர்களுக்கான இரண்டாந்தர நிறைவேற்று வகுப்பு நியமனப் பத்திரங்களை யாவும் இம்முறை சிங்களத்தில் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளன. இந்த நியமனப் பத்திரங்களை அங்கீகரிக்க மறுத்து, தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்கள், எழுதுவினைஞர்கள்.

நிறைவேற்று வகுப்பு இரண்டாம் தரப் பரீட்சை சித்தியடைந்தவர்கள் இந்த நியமனக் கட்டளைகளைப் பெற வேண்டுமென்ற அவசியம் இல்லை. பரீட்சை சித்தியெய்திய காலத்திலிருந்து அவர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்க வேண்டியது தான் நியதி. ஆனால் கல்வி அமைச்சின் இழுள்ள பரீட்சைப் பகுதியில் கடமை பார்க்கும் ஒருவர், சிங்களத்திலிருந்த நியமனக் கட்டளையைப் பெற மறுத்ததினால், அவருக்குரிய சம்பளம் மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

துறைமுக கமிஷன் காரியாலயத்தில் கடமை பார்க்கும் ஒருவருக்கு, சிங்களத்தில் அனுப்பப்பட்ட நியமனக் கட்டளையை அவர் ஏற்க மறுத்தார். இலாகாத் தலைவர் இம் மறுப்பை ஏற்றுக் கொள்ளாது, தனது குறிப்பை எழுதியுள்ளார். அக் குறிப்பில் "சிங்களமே இந்நாட்டின் உத்தியோக மொழி. ஆங்கில மொழி மூலம் பொது சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு, ஆங்கிலத்திலேயே கட்டளைகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென்ற நியதியில்லை. சிங்கள மொழியில் உள்ள கட்டளையை ஏற்றுக் கொள்ள மறுக்கும் இந்த எழுதுவினைஞருக்கு மீண்டும் ஒரு முறை கட்டளையைக் கொடுங்கள். அவர் ஏற்க மறுத்தால் என்னிடம் அறிவிக்கவும். நான் தகுந்த வற்றைச் செய்கிறேன்." என்று கூறப்பட்டுள்ளது.

## வவுனியாவில் சிங்களவர்களை குடியேற்றும் சதித்திட்டம்

## தமிழர்களை வடக்கே ஒதுக்க அரசாங்க அதிபரின் முயற்சி

வவுனியாப் பகுதியில் சிங்களவர்களைக் குடியேற்றி, சிங்களவர்களின் எண்ணிக்கையைப் பெருக்கி, அதனைச் சிங்களப் பிரதேசமாக மாற்றும் ஒரு திட்டம் மிகத் திறமையான முறையில் அமுல் நடத்தப்படுகிறது. இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ள வவுனியா அரசாங்க அதிபர் ஒரு நுட்பமான உபாயத்தைக் கையாண்டுள்ளார் என்று தெரிகிறது. சென்ற ஆண்டு வவுனியா மாவட்டத்தில் கொல்லப் புளியங்குளத்தில் சுமார் 200 பேருக்குக் காணி வழங்குவதற்காக காணிக் கச்சேரி அறிவித்தல் விடப்பட்டிருந்தது. அதற்கு விண்ணப்பித்தவர்கள் அநேகமாகத் தமிழர்களே. ஆனால் அந்தப் பகுதியில் சிங்களவர்களைக் குடியேற்ற இப்பொழுது தீவிர ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று "சுதந்திரனுக்கு" செய்தி கிடைத்துள்ளது. இனசரி இருபது, முப்பது சிங்களக் குடும்பங்கள் கேகாலைப் பகுதியிலிருந்து வவுனியாவுக்குக் கொண்டு வரப்படுகின்றனராம்.

வவுனியா மாவட்டத்தில் கொல்லப் புளியங்குளத்தில் 200 பேருக்குக் காணி வழங்கப்படும் என்று அறிவித்ததையொட்டி சுமார் 2500 பேர் காணி கோரி விண்ணப்பம் செய்தனர். விண்ணப்பதாரர்கள் அநேகமாகத் தமிழர்களே.

அவர்களில் ஒரு சிலருக்கு மட்டும் கொல்லப் புளியங்குளத்தில் காணி வழங்கி விட்டு, ஏனையோருக்குக் கிளிநொச்சிக்கு அப்பால் சுந்தரபுரம் பகுதியில் (அவர்கள் கேட்காமலே) காணி வழங்கப்பட்டு வருகிறது.

காணிச் சட்டத்துக்கு முரணாக, காணிக் கச்சேரிக்குச் செல்லாதவர்களுக்கும் காணி வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

வவுனியாவுக்கு வடக்கே வெகு தொலைவில் தமிழ் பேசும் மக்களுக்குக் காணிகளைக் கொடுத்து அவர்களை வடக்கே ஒதுக்கிவிட்டு வவுனியா பட்டினத்தைச் சார்ந்த பகுதியில் சிங்களவர்களைக் குடியேற்றி, வவுனியாவையும் ஒரு சிங்களப் பிரதேசமாக்கிவிட வேண்டுமென்பதே அரசாங்கத்தின் திட்டம். அத்திட்டந்தான் இப்பொழுது படிப்படியாக நிறைவேற்றப் படுகிறது.

வவுனியாவில் காணி வழங்குவதற்காக இப்பொழுதிருந்தே தினசரி இருபது முப்பது சிங்களக் குடும்பங்கள் கேகாலை மாவட்டம் போன்ற இடங்களிலிருந்து வவுனியாவுக்குக் கொண்டு வரப்படுகின்றனராம்.

### சிங்களப் பிரதேசமாக மாறும்

இந்த சிங்கள மயத்திட்டத்தை முன்னின்று நடத்தி வைப்பவர் வவுனியா அர

(9-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மாநகரசபையில் வகுப்புவாத வெறியாட்டம்

## தமிழ் அதிகாரியை நியமிக்க கமிஷனர் மறுப்பு

கொழும்பு மாநகர சபையில் தமிழ்—எதிர்ப்பு நடவடிக்கைகள் உச்ச நிலை அடைந்து வருகின்றன. கொழும்பு மாநகர சபையின் சுகாதார நடவடிக்கைகளைப் பிரசாரம் செய்வதற்காக ஒரு தமிழ்ப் பிரசார அதிகாரியை நியமிக்க வேண்டுமென மாநகர சபையின் தலைமை வைத்திய அதிகாரி டாக்டர் கே. வி. நடராஜா சிபார்சு செய்தார். முனிசிபல் கமிஷனர் திரு. வி. ஏ. ஜயசிங்க இந்தச் சிபார்சை நிராகரித்ததோடு, இம்மாதிரி தமிழ் அதிகாரியை நியமிக்க எவ்வகையிலும் இடமளிக்க முடியாதென்றும் கூறினாராம்.

மாநகர சபையில் சுகாதார நடவடிக்கைகள் சம்பந்தமாகப் பிரசாரம் செய்வதற்கு ஆங்கில, சிங்கள அதிகாரிகள் முறையே நியமிக்கப்பட்டுள்ளனர். ஆகையால்தான் ஒரு தமிழ் அதிகாரியும் நியமிக்கப்பட வேண்டியது அவசியமென்பது வைத்திய அதிகாரியின் கருத்து. தமிழ் அதிகாரியை நியமித்தால் சிங்களத் தில் அலுவல்களை நடத்த வேண்டுமென்ற மாநகர சபையின் தீர்மானத்திற்கு இடையூறு விளைவிப்பதாகும் என்று கமிஷனர் கூறியிருக்கிறாராம்.

ஆனால் தமிழ் பிரசார அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டுமென்பதை மாநகர சபையின் நிதிக் கமிட்டியும் அங்கீகரித்துள்ளது. கமிஷனரின் முடிவைக் கண்டு தாங்கள் கவலைப் படுவதாக நிதிக் கமிட்டி கமிஷனருக்கு தெரிவித்துள்ளது.

மாநகரசபை அலுவல்கள் அனைத்தும் இப்பொழுது சிங்களத்தில் நடைபெறுவதால் தமிழ் அதிகாரியை நியமிப்பதால் அந்த அலுவல்கள் சிக்கலாகிவிடுமென கமிஷனர் காரணம் கூறியிருக்கிறார்.

கொழும்பு நகரில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களிடையே ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் சுகாதார நடவடிக்கைகள் பற்றி பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறதாம். தலை நகரிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களை இவ்வாறு அடியோடு புறக்கணிக்கும் மாநகர சபைக்கு வருமானம் கணிசமான அளவு தமிழ் பேசும் மக்களிடமிருந்தே கிடைக்கிறது. அவர்களிடமிருந்து அறவிடப்படும் வரிப்பணத்தைக் கொண்டு தமது சபை அலுவல்களை நடத்தும் யு. என். பி. நகரசபை ஆட்சியாளர் அவர்களை நகரில் இரண்டாந்தர பிரஜையாக்க முயற்சி செய்கின்றனர்.

சகலவித மூலநோய் நிவாரணி
ரிச்லெட்ஸ்
ப்ளட் பியூரிபயர்
(RICHELET'S BLOOD PURIFIER)
இரத்த சுத்தி செய்து


மூலம்
வாதம்
படை
(ECZEMA)
மாத
விடாய்

கோளாறுகள்
முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடித்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடையவேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானாகவே ஏற்படும்.
எங்கும் கிடைக்கும்.
வெஸ்டர்ன் ஏஜன்சீஸ்,
63, பேங்ஷால் வீதி, கொழும்பு.
(போன்: 2885)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்த்த முஸ்லிம் புலவர்கள்

இலங்கையில் வாழும் எண்ணற்ற முஸ்லிம் புலவர்கள், இலை மறை காய் போல் இன்றும் ஒழிந்து கொண்டிருக்கின்றனர். எழுத்தறியாக் கவிஞர்களாகவே பலர் இன்றும் வாழுகின்றனர். அவர்களை தமிழ் கூறும் நல்லுலகம் அறிந்து ஏற்றிப் போற்ற வேண்டும்; அவர்களுடைய கருத்துக் கருவூலங்கள் தமிழ் பேசும் மக்கள் சமுதாயத்தின் மத்தியில் நிலையான இடம் பெறவேண்டும் என்ற ஆர்வம், கற்றறிந்து அவ்வழியொழுகும் பல இஸ்லாமிய இளைஞர்களிடம் மிளிர்வதைக் காண்கிறோம். வாழ்ந்து மறைந்த இஸ்லாமியப் புலவர்களின் வரலாறுகளை இனிய தமிழில் ஆசிரியர் ஜனாப் யூ. எல். தாவூத் இக் கட்டுரைத் தொடரில் விளக்க முனைந்துள்ளார்.

போரிலங்கையில் பிறந்து, வையகத்தில் வளர்ந்து, சங்கப் புலவர்களின் மடியிலே தவழ்ந்து வளர்ந்த கன்னித் தமிழின் அழகில் சொக்குண்டு காதல் வயப்பட்ட கவிவலவர் பலர், தமிழ் மொழி காலத்திற்குக் காலம் பல்வேறு சமயத்தவர்களாலும், பல்வேறு இனத்தவர்களாலும் வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது. வண்டமிழின் வளர்ச்சியில் பங்கெடுத்த கவிவலவர் பலர் தங்கள் சமய நெறிகளையும், மதப் பெரியார்களின் வரலாற்று நிகழ்ச்சிகளையும் தமிழ்த் தேனில் குழைத்தெடுத்து இலக்கிய மாளிகை எழுப்பியிருப்பதைக் காண்கிறோம். சைவநெறி தழைக்க நாயன்மார்கள் பாடிய தேவாரத் திருவாசகங்கள், வைணவம் வளர ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள், கருத்துக் கருவூலங்களென எற்றிப் போற்றப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, நாலடியார், நெடுஞ்சையனாரும் ஐம்பெருங் காப்பியங்கள், சிந்தை கவரும் சிறு காப்பியங்கள், மேலை நாட்டிலிருந்து சமயத் தொண்டராகப் பணியாற்றவந்து தமிழ்த் தொண்டராக மாறிய வீரமாமுனிவரின் "தேம்பாவணி," "வேதியரொழுக்கம்" முதலியன தமிழ் இலக்கிய வானில் புகழ் மணம் பரப்பிப் பொலிவுடன் திகழும் நல்லிலக்கியங்களாகும்.

## பைந்தமிழ் வளர்ச்சியில் இஸ்லாமியர் பங்கு

இவ்வாறு இனத்தாலும், மதத்தாலும் வேறுபட்ட பல்வேறு சமயத்தவர்களால் வளர்க்கப்பட்ட பைந்தமிழின் வளர்ச்சியில் இஸ்லாமிய பெருங்குடி மக்களும் பங்கெடுத்திருக்கின்றார்கள். தமிழ் கற்று, அதையே அன்னை மொழியாகக் கொண்டுள்ள முஸ்லிம்கள் தமிழ் உணர்வோடு, தமிழார்வத்தோடு பணி புரிந்திருக்கின்றார்கள். இஸ்லாமிய இனம் தோற்றுவித்த முஸ்லிம் தமிழ்ப் புலவர்களெல்லாம் செந்தமிழ்க் குரிசில்களாக—கவிதைப் பெருங்கடல்களாக விளங்கினார்கள். தமிழுக்குப் புது வனப்பும் வலிவும் தந்த இக்கவிவலவர்கள் தமிழுக்காகவே வாழ்ந்து தேன்தமிழில் எழிலொழுகும் இன்பக் காவியங்களைச் சமைத்துத் தந்துள்ளார்கள்.

முஸ்லிம் புலவர்களின் இலக்கிய சிருஷ்டிகளெல்லாம் சமய அடிப்படையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. இவர்களது நூல்கள் பொதுவாக இறையருள் திருமறை கருத்தையும், திருநபி அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும்; இஸ்லாத்தின் பண்பு நலன், மனித வாழ்க்கையின் மாண்பு, இஸ்லாமிய மதப் பெரியார்களின் வரலாற்று நிகழ்ச்சிகள் முதலியவைகளையும் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன.

சங்க காலந்தொடக்கம் இருபதாம் நூற்றாண்டு வரை தமிழில் பொதுவான இலக்கிய நூல்களே தோன்றவில்லை என்று கூறலாம். அக்காலத்தில் தமிழகத்தில் தோன்றிய நூல்கள் அனைத்தும் ஏதாயினும் ஒரு மதத்தை அடிப்படையாகக் கொண்டே சிருஷ்டிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். சான்றாக இராமாயணம் வைணவ மதத்தின் அடிப்படையிலும், மணிமேகலை புத்தமதப் பிரச்சாரத்திற்காகவும், சீவக சிந்தாமணி சைன மதத்தை உள்ளடக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டிருப்பதைக் கூறலாம். திருக்குறளில் கூட சமண மதக் கருத்துக்கள் விரவிக் கிடக்கின்றன என்பதை மறைப்பதற்கில்லை. பல்லவர் காலத்தில் ஆக்கப்பட்ட இலக்கியங்கள் சமண, பௌத்த மதங்களின் பிரச்சாரங்களை எதிர்த்து, சைவ, வைணவ சமயங்களைப் பரப்பு முகமாகவே அமைந்திருப்பதைக் காண்கிறோம். சோழர் காலத்திலும் இதையே காண்கிறோம். இருபதாம் நூற்றாண்டில் சுப்ரமணிய பாரதியின் காலத்திலிருந்துதான் பொதுவான இலக்கிய நூல்களை நாம் காண்கிறோம். இந்நிலையில் நின்று ஆராயும்போது முஸ்லிம் புலவர் பெருமக்களின் ஆக்கங்களும் சமய அடிப்படையில் எழுப்பப்பட்டிருப்பதைக் கண்டு குறை கூற முடியாது.

## முஸ்லிம் புலவர்களின் இலக்கியப் படைப்புக்கள்

முஸ்லிம் புலவர்கள் யாத்தளித்த இலக்கிய ஆக்கங்களைப் பொதுவாக புராணம், கலம்பகம், பிள்ளைத் தமிழ், மாலை, படைப்போர், அந்தாதி, கும்மி, உலா, மசாலா, அம்மானை ஆகியவைகளில் அடக்கலாம். இப்புலவர் குழாம் தமிழ்ப் பெருங்கடலில் மூழ்கிக் கண்டெடுத்த இராஜநாயகம், ஆரிபு நாயகம், முகைதீன் புராணம், செய்தத்துப் படைப்போர், மதீனத்துக் கலம்பகம், புதுகுஷ்ஷாம் முதலியன தமிழ் இலக்கியத்தின் மணிமுடியி

**யூ. எல். தாவூத்**

லுள்ள பெருமணிகளாகத் திகழ்ந்து அதனை அணி செய்வதோடு தமிழின் இனிமையைப் பறைசாற்றும் உயரிலக்கியங்களாகவும் மிளிர்கின்றன.

மாநிலந் தனக்கோர் மணி விளக்கெனலாய் அவதரித்த மாநபியின் மாண்புறு வரலாற்றைப் புதுமைக் கவிகளில் புனைந்தளித்த புலவர் உமறின் செந்தமிழ்க் காப்பியமான சீறாப் புராணம் தமிழறிவு பெற விரும்பும் பிற சமயத்தவர்கள் கூடப் படித்தின்புறக் கூடியதாக அமைந்துள்ளன. காசிம் புலவரின் திருப்புகழும், அப்துல் காதிறுப் புலவரின் சந்தத் திருப்புகழும், அருணகிரிநாதரின் திருப்புகழோடு சம இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றன. கலாநிதி சு. வித்தியானந்தன் கூறுவது போல இந்நூல்களில் பாட்டுடைத் தலைவராக அமைவோர் வேறு வேறாக இருப்பினும் நூல் அமைப்பு முறையிலும், நடையிலும், போக்கிலும் பேர்பெற்ற தமிழ் இலக்கியங்களுக்கும், முஸ்லிம் புலவர்களின் நூல்களுக்குமிடையில் அடிப்படையான வேறுபாடு அதிகமில்லை. நூலமைப்பு முறைகள் தமிழ் மரபுக்கு ஒத்தனவாகவும், தமிழ்ப் பண்புக்கு இயைந்தனவாகவும் அமைந்திருக்கின்றன. அருங்கவி கூறின முஸ்லிம் தமிழ்ப் புலவர்களும் தமிழன்னைக்கு அழகுமிக்க தான அணிகலன்களைப் பூட்டிப் புகழ் பெற்று விட்டனர்.

## முஸ்லிம் புலவர்களின் தமிழ்த் திருப் பணி

இன்பத் தமிழையே தங்கள் அன்னை மொழியாகவும், வீட்டு மொழியாகவும் கொண்டு இலங்கையின் பல மாகாணங்களிலும் பரந்து வாழும் முஸ்லிம் மக்கள் தங்களைத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த தாய் மொழிக்குப் பாராட்டத் தொண்டாற்றி வந்திருக்கின்றார்கள். இதற்குச் சான்றாக இன்று கூட மங்காது ஒளி வீசிக் கொண்டிருக்கும் கொஞ்சு தமிழ் பாக்களைக் காணமுடிகிறது.

ஈழத்து இஸ்லாமிய இனம் எழுப்பித் தந்த முஸ்லிம் பாவலர்கள் இஸ்லாத்தின் தத்துவங்களை உள்ளடக்கமாகக் கொண்டு, இனிய செந்தமிழ் தேன் சொட்டும் சொல்லழகும், கருத்தாழமுமிக்க இலக்கியங்களை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள்.

இலங்கைத் திருநாட்டில் தோன்றி மறைந்த முஸ்லிம் புலவர்களின் வரலாற்றில் நாம் கண்ணோட்டம் செலுத்தும்போது இப்புலவர் குழாத்தின் வரலாற்றுச் சம்பவங்களைப் பூரணமாக அறிய முடியாத நிலையிலிருக்கிறோம். இப்புலவர் பெருமக்களின் வாழ்க்கை வரலாறு, வரலாற்று நிகழ்ச்சிகள், தமிழ்த் திருப்பணிகள் முதலியன ஏட்டிலே தீட்டப்படவில்லை. அவர்களது காலத்தில் வாழ்ந்த பொதுமக்கள் கூட இவைகளைப் பொறித்து வைக்கத் தவறி விட்டனர். இப்புலவர்களின் படைப்புகளில் அச்சேறி வெளிவந்தவை சில. அவைகளும் கூட இன்று கவனிப்பாரற்றும் மங்கி, மறைந்து கல்லுக்கும் செல்லுக்கும் இரையாகி மூலைகளில் ஒதுக்கப்பட்டுக் கிடக்கின்றன. இவர்களின் கையெழுத்துப் பிரதிகளெல்லாம் வெளிக்கொணர ஆளில்லாது கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. இத்தகைய காரணங்களினால் ஈழத்து முஸ்லிம் புலவர்களின் தமிழ்த் தொண்டை இன்றைய தமிழுலகம் அறிந்து கொள்ள முடியாத நிலையிலிருக்கிறது. தமிழிலக்கிய உலகில் பெரும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வரும் இந்நாட்களில் ஈழத்து முஸ்லிம்களின் தமிழ்த் தொண்டும் வெளிப்படுத்தப்பட வேண்டும். இப்புலவர்களின் இலக்கிய சிருஷ்டிகளைப் பாதுகாத்தும் பலரும் படித்தின்புற வகை செய்ய வேண்டும். தமிழார்வம் படைத்தவர்கள் இப்பணியில் முன்வர வேண்டும். இனி ஈழத்தில் வாழ்ந்து மறைந்த முஸ்லிம் தமிழ்ப் புலவர்களைப் பற்றிச் சுருக்கமாக ஆராய்வோம்.

> அடுத்த வாரம்
> யாழ் நகர் தந்த
> அசனார் லெவ்வைப் புலவர்

# மக்கள் குரல்

## சுதந்திரனை மறைத்தார்கள்

வல்லைப் பெருநகரிலே 'மந்திரிக்கு வரவேற்பு' என்ற திரை மறைவிலே ஆடிய நடனங்கள், நடத்திய நாடகங்கள் அனைத்தையுமே தமிழ் பேசும் மக்கள் காறி உமிழும் வண்ணம் அக்குவேறு ஆணி வேறாகி எமக்குத் தெரியத் தந்த பெருமை, தமிழ் பேசும் மக்களின் இதயக் குரலான 'சுதந்திரன்' பத்திரிகைக்கே உரியதாகும். நடைபெற்ற செய்கைக்காக பொது மக்கள் அனைவருமே காறி உமிழ்ந்து கொண்டிருக்கும் இந்த வேளையிலே முகமன் கூறி வரவேற்றவர்கள் எல்லாம் முக்காடிட்டு விட்டிருக்கும் இந்த வேளையிலே தான் அவர்களது கூலிப் பட்டாளங்கள் தங்களுடைய கேடுகெட்ட தொழிலைக் காட்ட ஆரம்பித்துள்ளார்கள். அந்தக் கையாலாகாதவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? வல்லை சனசமூக சேவா நிலையத்திற்கு வந்த கடந்த 3 வார 'சுதந்திரன்' பத்திரிகையையும் மறைத்தார்கள். இலட்சிய வாதிகள் விட்டு விடுவார்களா? இனம் தினமும் புதிய பத்திரிகையை வாங்கி பொது மக்களின் பார்வைக்கு முன் வைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். மதி கெட்ட சிலரும் பத்திரிகையைப் பழிவாங்கிய வண்ணம் இருக்கிறார்கள்.

பத்திரிகைகள் புத்தகங்கள் காணமற் போவது வல்லை சனசமூக நிலையத்திற்கு ஒன்றும் புதிதல்ல. [illegible] மானமுள்ள, சுய புத்தியுள்ள மனிதன் செய்யும் செய்கையா இது? வெட்கக் கேடு. மானமற்று, மதிகெட்டு, மண்டியிட்டு கூலிக்கு மாரடிக்கும் இந்த கேவலமான செயலுக்காக நாம் அவர்கள் மீது கோபப்பட வேண்டாம். அனுதாபப்படுவோம் ஏதோ வாங்கும் கூலிக்கு இவை போன்ற செய்கைகளையாவது செய்து அற்ப சந்தோஷத்தைக் காணும் இவர்களின் மீது நாம் அனுதாபப் படுவோம். ஏதோ ஒரு வழியாக வாழ விரும்புகிறவர்கள். வாழட்டும். வாழ்த்துவோம்.

ஆ. அப்பாத்துரை.
வல்வெட்டித்துறை,

## கும்பிட்ட கையே கோயிலை இடிப்பதா?

அனுராதபுரம் புனித நகரமாக்கப்பட்டதும், ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள்ளிருந்த மக்கள் வெளியேற்றப் பட்டனர். புத்த மதமல்லாத வேறு இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதக் கோயில்களும் கடவுள்களும் கூட அந்த எல்லைக்குள்ளிருந்து அகற்றப்படுகின்றன.

இப்படி வெளியேற்றும் பணியை அரசாங்கமே நடத்திவருகிறது. கதிரேசன் கோயிலை அப்புறப்படுத்தும் திட்டத்தை அரசாங்கம் ஏனோ தானே செய்ய முன்வரவில்லை. மக்கள் பக்தியுடன் வழிபட்டு வந்ததனால், கதிரேசன் பால் ஆட்சியாளருக்குப் பயம் ஏற்படுவது இயற்கையே.

கதிரேசன் கோயிலை இடிக்கும் பணியை, கோயில் தர்மகர்த்தாக்களிடம் விட்டு விடத் தீர்மானித்திருக்கின்றனர். இதை முடிப்பதற்காக தர்மகர்த்தாக்களுக்கு கோயிலின் கூரையிலுள்ள ஓடுகளையும் தளபாடங்களையும் இலவசமாகக் கொடுத்து விடவும் முடிவு செய்துள்ளனராம்.

தாங்கள் பக்தியுடன் வழிபட்ட தெய்வத்தின் ஆலயத்தை இடிக்க எந்த இரும்பு நெஞ்சனுக்கும் இதயம் இடம் கொடுக்காது. தர்மகர்த்தாக்கள் இக் கொடிய செயலில் இறங்கி, அதனால் ஏற்படும் தெய்வ பழிக்கு ஆளாகி அல்லற்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அந்தப் புனித கைங்கரியத்தை ஆட்சியாளரே செய்து "புண்ணியத்தை" தேடிக் கொள்ளட்டும்.

இப்படிக்கு,
கதிரேசன் பக்தர்கள்.

விற்பனைக்கு

வீட்டுக் கட்டிடத்துக்குத் தேவையான சகல விதமான இரும்புச் சாமான்கள் எங்களிடம் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கமும் சகாக்களும் லிமி.

33, 3-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

450, பழைய சோனகத் தெரு,
கொழும்பு.

138, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வ. திருகோணம், கைதடி.

கே: ஒருவன் திருமணம் செய்வது எதற்காக?

ப: ஆயுட்காலச் சிறைத் தண்டனை அனுபவிப்பதற்காக.

ஃ

எஸ். பூரணி, சாவகச்சேரி.

கே: பணத்தைத் தேடி நாம் போவதற்கும் பணம் நம்மைத் தேடி வருவதற்கும் என்ன வித்தியாசம்?

ப: உழைப்புக்கும், ஆஸ்பத்திரி தவிப்பு, பரிசுக்கும் உள்ள வித்தியாசந்தான்.

ஃ

இதயகுமேன், இறக்குவானை.

கே: நீர் தடுப்புக் காவலில் இருக்கும் போது "ஊன நாயகத்தை" பற்றி என்ன தெரிந்து கொண்டீர்?

ப: அது ஒரு ரப்பர் என்பதைத் தெரிந்து கொண்டேன். இழுத்தால் நீளும்—விட்டால் சுருங்கும்.

ஃ

வி. வேலன், சாகஸ்

கே: உலகில் நிலையான பொருள் எது?

ப: உண்மை.

ஃ

பி. குகநாதன், வெள்ளவத்தை.

கே: குயுக்தியாரே, தங்களுக்கு 28-ந் திகதி இரவு உறக்கம் வந்ததா?

ப: தேர்தல் முடிவுகளை வானொலியில் கேட்பதற்காக அன்றிரவு விழித்துக் கொண்டிருந்தேன் என்று நினைக்கிறீரா? இடையவே கிடையாது. இதர அபேட்சகர்களை விட அதிகமான வாக்குகளைப் பெறும் அபேட்சகர் நிச்சயமாக வெற்றி பெறுவார் என்ற தகவல் எனக்கு ஏற்கனவே கிடைத்திருந்ததால் எவ்வித பரபரப்புமின்றி அன்றிரவு நிம்மதியாக உறங்கினேன்.

ஃ

ஆர். கணபதி, கேகாலை.

கே: ஆண்களுக்கு மட்டும் முகத்தில் மீசை முளைக்கிறதே அம்மாதிரி பெண்களுக்கு ஏன் மீசை முளைப்பதில்லை.

ப: அவர பிளேட்டுகளின் விலை அதிகரித்துவிடுமென்பதற்காக.

ஃ

பே. மயநாயகம், செம்பியன்பற்று.

கே: திரு. பொன்னம்பலத்துக்கு மந்திரிபதவி கிடைத்து, தனக்கு அப்பதவி கிடைக்கவில்லை என்பதற்காகவே திரு. செல்வநாயகம் தமிழ்க் காங்கிரஸிலிருந்து வெளியேறினாரென எனது நண்பர் ஒருவர் கூறுகிறார். இது சரியா?

ப: வோட்டர்களைக் கட்டிப் பிடித்து தன் பக்கம் இழுப்பதற்காக திரு சுந்தரலிங்கம் திரித்த கயிறுதான் இது—பாவம்! பிறகு அதே கயிற்றில் அவரது அரசியல் வாழ்வு சுருக்குப் போட்டுக் கொண்டது.

ஃ

வை. அ. பிரமன், அளவெட்டி.

கே: தமிழ் முழக்கம் செய்த இராசி ஒன்று இன்று தனிச் சிங்கள ஆட்சிக்கு ஏற்றாத முற்பட்டதின் மர்மமென்ன?

ப: "கர்த்தபகேசரி"யைப் பற்றி கேட்கிறீரா?

கே: தமிழரசுத் தந்தை செல்வநாயகம் அவர்களின் சுயசரிதை புத்தக ரூபமாக எப்போது வெளிவரும்?

ப: அதற்கெல்லாம் அவருக்கு இப்பொழுது அவகாசம் ஏது? தமிழ் பேசும் இனம் விடுதலை பெற்ற பிறகல்லவா சுயசரிதை எழுதுவதைப் பற்றி அவர் சிந்திப்பதற்கே நேரம் கிடைக்க முடியும்.

ஃ

தமிழ் தேவி, அல்வத்துகொட.

கே: திருமதி குயுக்தியார் பிறியா அம்மாவின் இடத்துக்கு வர ஒரு சந்தர்ப்பம் கிட்டினால் தாங்கள் என்ன செய்வீர்கள்?

ப: திரு. பண்டாரநாயக்கா இருக்கும் இடத்துக்குப் போய்விடுவேன்.

ஃ

பூ. சரதி, கல்வினான்.

கே: நான் மனைவியைக் கைப்பிடித்து இன்னும் பூரணமாக ஒன்பது மாதங்கள் கூட முடியவில்லை, அதற்குள் சடுதியாக இருதா பிறக்குது—வயிறு நோகுது, என்று மருத்துவச்சியை அழைத்து வரும்படி கூறுகிறாளே! இதன் மர்மமென்ன?

ப: யார் விதைத்தாலும், இனி நீங்கள் அறுவடை செய்ய வேண்டியவர்தான்—மாகுல் உங்களுக்குத்தானே சொந்தம்!

ஃ

கே. ஏ. மூர்த்தி, அல்வை தெற்கு.

கே: சிங்களப் பட்டதாரிகளும் பண்டிதர்களும் சிங்களத்தில் "சிறீ" என்று ஓர் எழுத்து இல்லை என்று சொல்லும் போது ஆட்சியாளருக்கு மட்டும் எப்படி "சிறீ" எழுத்து வடிவம் தெரிந்தது?

ப: சிங்களத்தில் ஒரு "சிறீ" எழுத்து உபயோகத்தில் உண்டு. ஆனால் அது அசல் சிங்கள எழுத்து அன்று. "ஸ்ரீ" என்னும் எழுத்தின் உருவத்தை ஓரளவு திரித்து உருவாக்கப்பட்டதுதான் சிங்கள "சிறீ" அதைப் பிடித்துக் கொண்டு தான் ஆட்சியாளர் சிங்கள 'சிறீ' என்று கூச்சல் போடுகிறார்கள். ஆனால் தனிச் சிங்களத்தில் எழுதுபவர்கள் "ஸ்ரீ" என்ற எழுத்தை உபயோகிக்கவே மாட்டார்கள். அதற்குப் பதிலாக சிங்களத்திலும் "சிறீ" (சியன்ன, றியன்ன) என்னும் இரு எழுத்துக்களைத்தான் எழுதுவார்கள், அதாவது: 'ஸ்ரீ' என்பதைச் சிங்கள எழுத்து என்று தனிச் சிங்களம் ஏற்றுக்கொள்ளவில்லை, கலப்புச் சிங்களந்தான் (மிஸ்ர சிங்கல) "ஸ்ரீ"யை மருவிய சிங்கள எழுதது என்று ஏற்றுக் கொள்கிறது. ஆயினும் சிங்கள மொழியின் வளர்ச்சிக்கு சிங்கள "ஸ்ரீ" எவ்வகையிலும் பயன் படாத ஓர் எழுத்தாகும்.

ஃ

எஸ். முருகன், துனுக்காய்.

கே: கல்யாணம் செய்ய கையில் பணமில்லை. என்ன செய்யலாம்?

ப: கையில் இல்லாவிட்டால் கடன் வாங்கி செய்யலாம்.

ஃ

ஏ. எம். எம். ருபிக், கம்பளை.

கே: பெண்கள் "ஸ்லாக்ஸ்" அணிந்த ஆடவர்களைப் பெரிதும் விரும்புவதேன்?

ப: பதினொன்று அதிர்ஷ்டஎண் என்பது அவர்களின் எண்ணம்.

ஃ

நா. மகேஸ்வரன், அம்பாறை.

கே: காலையும் மாலையும் கடவுளை வணங்கு என்று பெரியோர் கூறியிருக்கின்றனர், அப்படியானால் இடைப்பட்ட நேரத்தில் என்ன செய்வதாம்?

ப: கடவுளை வணங்காமல் இருப்பதாம்!

ஃ

எம். வி. எம். ஸ்பைர், கம்பளை.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். ஆனால் எனது நண்பன் காதல் திருமணம் கூடாது என்கிறான். நண்பர் பெரிதா? காதல் பெரிதா?

ப: கல்யாணத்துக்கு முன் காதல் என்றால் காதல் தான் பெரிது; காதலுக்காகக் காதலென்றால் நண்பன் தான் பெரிது.

ஃ

செல்வி பாலாமணி, வண்ணார்பண்ணை.

கே: உடைந்த உள்ளத்திற்கும் காயப்பட்ட உள்ளத்திற்கும் என்ன வித்தியாசம்?

ப: உடைந்தால் ஒட்ட வைக்க முடியாது, காயப்பட்டால் சுகப்படுத்தலாம்.

கே: பிரச்சினைகள் இல்லாமல் மனிதன் வாழ முடியாதா?

ப: வாழ்வே ஒரு பிரச்சினை தானே!

ஃ

அ. பஞ்சாட்சரம், வட்டக்கச்சி.

கே: தற்காலத்து நாரீமணிகள் விடும் குறைகளை நீங்கள் அம்பலப்படுத்தும் போது திருமதி குயுக்தியார் தங்கள் மீது சீறுவதில்லையா?

ப: சீற்றமா? சிரித்து சிரித்து வயிற்றைப் புண்ணாக்கிக் கொண்டு, அதற்கு வேறு வைத்தியம் செய்துகொண்டிருக்கிறாள்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

ஃ

நா. குமாரவேல், வேலணை.

கே: சென்ற 17-2-62ல் நடந்த சிங்கள மொழித் தேர்வுப் பரீட்சையில் சிங்களவர்களைவிட தமிழர்கள் பெருந் தொகையாகச் சித்திபெய்தியதைப் பற்றி தங்களின் அபிப்பிராய மென்ன?

ப: அந்த விஷயந்தான் "சகுதிக்கு வந்தவை" யில் சந்தி சிரிக்கிறதே!

கே: இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தற்போதைய அரசியற் கொள்கை என்ன?

ப: ஆளும் கட்சிக்கு திவட்டி பிடிப்பது.

ஃ

ராஜா, கருவாஞ்சிக்குடி.

கே: மூதூரில் பிரதமருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வண்ணம் கட்டப்பட்ட கறுப்புக் கொடிகள் எல்லாம் நீலக் கொடிகள் என்று சொல்லுகிறாரே கல்வி மந்திரி! இதைப் பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: காமாலைக் கண்ணனுக்கு கறுப்பும் நீல நிறம்.

ஃ

ஆர். எஸ். கே. சோமசுந்தரம் பிள்ளை, மருதங்குளம்.

இப்போது படிக்கும் மாணவர்களின் வருங்காலம் எப்படியிருக்கும்?

ப: கடன் வாங்கிக் காலட்சேபம் செய்வதாயிருக்கும்.

ஃ

இ. சி. சுப்பிரமணியம், சுழிபுரம்.

கே: இங்கே ஒருவர் தம்மைத் தாமே புகழ்ந்து கொண்டிருக்கிறார். என்ன செய்யலாம்?

ப: வெறும் தகர டப்பா—விட்டுத் தள்ளும்.

ஃ

க. கனேசரத்தினம், தொண்டமானாறு.

இருப்பது அண்டவன் கையிலா? [illegible] கையிலா?

ப: யார் கையிலுமில்லை: வானவெளியின் வயிற்றில்.

ஃ

வி. எஸ். எம். பொன்னம்பலம், பதுளை.

கே: குயுக்தியாரே, உங்களுக்கு எதிரிகள் இருக்கிறார்களா? அவர்களை ஒழித்துக்கட்ட என்ன முறையைக் கையாள்கிறீர்கள்?

ப: எனது எதிரிகளை நான் ஒழித்து கொண்டுதானிருக்கிறேன். நான் அவர்களை எனது நண்பர்களாக்கியதும் எதிரிகள் அழிந்து போகிறார்கள்.

ஃ

வி. சொல்வேந்தன், கிரான்.

கே: பெரும்பான்மையினருடன் சேர்ந்தால்தானே நன்மை பெற முடியும்? எதிர்த்து நின்று என்ன பலன்?

ப: ஆம், பெரும்பான்மையோர் நன்மை பெற முடியும். சேர்ந்தால், கடைசியில் மிஞ்சுவது பெரும்பான்மை மட்டுமே.

ஃ

அழகராஜா, வட்டுக்கோட்டை.

கே: இவ்வுலகில் நம்மால் தடுத்து நிறுத்த முடியாதது ஏதாவதுண்டா?

ப: உண்டு—வயது.

ஃ

புஷ்பா ஆனந்தன், காலி.

கே: எனது கணவர் கோபம் வந்தாலும் கூட என்னை அடிக்க மாட்டார். நீங்கள் குயுக்தி மாமியை அடிப்பதுண்டா?

ப: இல்லை. ஆனால் சில சமயங்களில் நான் தற்பாதுகாப்பை முன்னிட்டு திருப்பி அடிப்பதுண்டு.

பாகப்படி மூலித் திராவகங்களால் தயாரிக்கப்பட்டது
MEV SUGAR BALM
மெவிக்கார் பாம்
இது தலையிடி, தேள்கடி, வாதம், பல்வலி, இருமல், ஜலதோஷம், வெட்டுக்காயம்
முதலிய வியாதிகளை நொடிப்பொழுதில் நீக்கி சுகம் அடையச் செய்யும்.
ஒருமுறை உபயோகித்து உண்மை அறியுங்கள்.
எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
உங்கள் வீடுகளில் அவசியம் இருக்க வேண்டியது.
உடன் வெட்டுக் காயங்களுக்கு கை கண்ட தைலம்
விலை போத்தல் ஒன்று ரூ. 1-25 சதம்
பிற ஊர்களில் ஏஜண்டுகள் தேவை.
கவி கெமிக்ஸ்,
19, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Dial 2739


ராஜ பீடி ஸ்பெஷல்
ராஜபீடி ஸ்பெஷல்
இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றே தான்
புகைத்து பலனடையுங்கள்
ராஜாபீடி கம்பனி
கொழும்பு-14.
டெலிபோன்: 2739

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

காலைக்கண்டன்

## நிசங்காவின் நீச நாடகம்

திரு. நிசங்கா விஜய ரத்ன பிரதமர் ஸ்ரீமாவோவின் உறவினர். அசல் பௌத்த சிங்கள வாதி. பௌத்தசிங்களவரல்லாதோருக்கு "எச்சில் கையாலும் காக்காய் ஓட்ட" மறுப்பவர். அவ்வளவு துவேஷி. சத்தியாக்கிரக முடிவு காலத்தில் யாழ்ப்பாண-அநுராதபுரக் கச்சேரிகளின் அதிபராக நியமனம் பெற்றார். சத்தியாக்கிரகத்தின் போதும், அதன் பின்னரும் ஏற்பட்ட பல சம்பவங்களுக்கு உடந்தையாக விருந்தவர். இப்பேர்ப்பட்ட "அரசாங்கத்துக்குத் தேவையான" ஒருவர், அநுராதபுர அரசாங்க அதிபர் பதவியிலிருந்து அப்புறப்படுத்தப் பட்டார்.

தேர்தல் காலம் நெருங்கியதும் அரசாங்கத்தினர், தங்கள் கட்சி வெற்றி பெற, மக்களின் அபிமானத்தைக் கவர விசித்திரமான பல வழிகளைக் கையாளுவார்கள். தனிப்பட்டவர் ஒருவர், அவர் எத்தகைய விரோதியாக விருப்பினும் கூட, சில விசித்திர சலுகைகளுக்கு அருகதையாக்கப் பட்டு விடுவார்—வோட்டு வேட்டை விநோதங்கள் அவை.

இதே ரீதியில் அநுராதபுரத்திலும், பூமி வழங்குதல், புதிய நகரில் முஸ்லிம்களுக்கு பள்ளிவாசல் அமைத்தல், இந்து வக் கோயில் கட்டுதல் முதலான வற்றில் விசேட சலுகைகளை அரசாங்கம் செய்ய முன் வந்தது. அநுராதபுரம் முஸ்லிம்கள் மத்தியில் பிளவை உண்டு பண்ணத் தக்க வகையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஆளும் அதிகார பலம் படைத் தோரும் நடத்திய "தேர்தல் ஸ்டண்டில்" மசூதிக்கு இடம் அளித்தலும் ஒன்றாக விருந்தது. குடியிருப்பு வசதிகளும் தமிழர், இஸ்லாமியர் ஆகியோரைக் கவர்ந்திழுக்கத் தக்கவையாய் அமைந்திருந்தன.

இப்படியான செய்கைகளையும், பௌத்த சிங்களவரல்லாதார் அடையும் நன்மைகளையும் பார்த்துப் பொறுக்கமாட்டாத அரசாங்க அதிபர் திரு. நிசங்கா விஜயரத்ன, தன்னுலானமட்டும் முட்டுக்கட்டைகள் போட்டுக்கொண்டிருந்தாராம். "தேர்தல் ஸ்டண்ட்" தான் நடைபெறுகிறது. உண்மையில் இந்த சலுகைகள் நடைமுறைக்கு வரப் போவதில்லை, என்று மேலதிகாரிகள் எத்தனையோ முறை எடுத்துரைத்தும், திரு. நிசங்கா செவி சாய்க்கவில்லையாம். ஆகவே உடனடியாக அவரது பதவிக்கு வேறொருவரை நியமித்து விட்டனர்.

## விஷமி சிறீதரன் யார்?

தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் காட்டும் வழி சரியெனக் கண்ட தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்தையும், கொள்கை ரீதியான வளர்ச்சியையும், இலங்கையில் செல்வாக்குப் பெறுவதோடு, வெளி நாடுகளின் கவனத்தையும் ஈர்க்கும் முறைகளையும் கண்டு பொறுமைத் தியில் புழுங்கும் புண்பட்ட நெஞ்சங்கள் சில உள. ஏதாவது விஷமத்தனம் பண்ணியோ, விதண்டாவாதங்கள் புரிந்தோ கட்சியின் கட்டுக்கோப்பைச் சிதறடிக்க வைக்கப் பார்க்கின்றனர். இந்த விஷமிகள் எந்த வேடத்தில் தோன்றினாலும் அந்த முகமூடியை அகற்றி அவர்களைச் சந்திக்கிழுப்பது தான் நமது அப்பாக்குட்டி அம்மானின் வேலை.

"ஸ்ரீதரன்" என்ற போலிப் பெயரில் ஒருவர் புகுந்து கொண்டு புரிந்த அட்டகாசங்கள் நமது சந்தியில் வெட்ட வெளிச்சமாயின. உண்மையில் மாஜிப்பாயில் "ஸ்ரீதரன்" என்ற பெயருடன் ஒருவர் இருக்கிறார். தன்னுடைய பெயரை வைத்துக் கொண்டு "முதுகெலும்பற்ற விஷமி"கள் பத்திரிகைகளில் புரளிவிடுவதைக் கண்டிக்கு முகமாக "டைம்ஸ் ஒப் சிலோன்" பத்திரிகையில் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அக் கடிதத்தின் தமிழாக்கத்தை கீழே தருகிறோம்:

"தமிழ் மருமகன் என்ற மகுடமிட்டு டைம்ஸ் ஒப் சிலோன் பத்திரிகையில் என்னுடைய பெயரைப் பாவித்து முதுகெலும்பற்ற ஒருவர் எழுதிய கடிதத்தைக் கண்ணுற்று வேதனை அடைந்தேன்.

இப்படியான ஒரு கோழையை என் வாழ்க்கையில் நான் ஒருபோதும் கண்டதில்லை. நான் எந்த அரசியல் கட்சியையும் சார்ந்தவனல்ல. இந்தக் கோழை தேவையின்றி என்னது பெயரை இழுத்திருக்கின்றது.

நான் ஒரு பாடசாலை செல்லும் மாணவன். எனக்கு கட்சி அரசியல் பற்றிய அறிவே கிடையாது.

தயவு செய்து என்னுடைய இந்த மறுப்பைப் பிரசுரியுங்கள்.

—ஆர். சிறீதரன்.

ஆனந்தா லொஜ்,

தெற்கு மானிப்பாய்."

பெயருக்குச் சொந்தக்காரர் தன் பெயரை அனுமதியின்றி பாவிப்பதாகச் சந்திக்கிழுத்தவர்களை முதுகெலும்பற்ற கோழை என்று குறிப்பிட்டிருக்கிறார். ரோசம் சிறிது ஒட்டிக் கொண்டிருந்தால், எங்கே தன் முகமூடியைக் கிழித்துக் கொண்டு, போலி வேடதாரி வருவாரா, வெளியே?

அவர் வரமாட்டார். ஆனல் அப்பாக்குட்டி அம்மான் லேசான ஆள் இல்லை. இதோ சந்தியில் நிறுத்துகிறார்.........பாவம்! அரசாங்க உத்தியோகமாவது நிலைக் கட்டுமே என்ற ஒரே அநுதாபத்தால் முழு முக மூடியையும் கிழிக்கவில்லை.

கடந்த வாரம் "ஸ்ரீதரன் கடித ஸ்டண்டுக்கு"ப் பொறுப்பாயிருந்த ஒருவரைப் பற்றி சந்தி அம்பலப்படுத்தியது. அவருடன் கூட ஒத்துழைத்த இன்னுமோர் முதுகெலும்பற்ற வீரரும் இவ்வாரம் சந்திக்கு இழுக்கப் படுகிறார். சந்தியில் பல தடவை இழுபட்ட அவர் தன்னை மறைக்க பல அவதாரங்கள் எடுப்பதன் நோக்கம் தான் என்ன வென்று அம்மானுக்குப் புரியவில்லை.

தலை, வால் அற்ற முண்ட மௌனத்தவி அவதாரமாகத் தவித்து நின்ற தமிழ் காங்கிரஸ் இவரை இவக்குவித்துக் கொண்டு, மீன்பிடி இலாகாவுள் ஒரு உருவம் திரிகிறது என்று முன்னர் நமது அம்மான் சந்தியில் நிறுத்தினாரே ஒருவரை! அதே பிரகிருதியும் சேர்ந்துதான், இந்த "ஸ்ரீதரன் பத்திரிகை ஸ்டண்ட்"டுகள் புரிந்துள்ளனர். கடந்த வாரம் ஸ்ரீதரன் விடயமாக சந்திக்கு வந்தவருடன் பக்கபலமாக இந்த முதுகெலும்பற்ற முண்டமும் சேர்ந்துள்ளதாம்.

'மீன் பிடி இலாகாவிலிருந்து வெளியேறி, பின்னர் இ. தெ. கா. காரியாலயத்துள் உலவி கடைசியாக பத்திரிகைகளில் பிரசுரமாகியதாம் இக் கடிதங்கள்' என்று பத்திரிகை வட்டார அம்மான்கள், நமது அப்பாக்குட்டி அம்மானுக்குக் கூறியுள்ளனர்.

### ஒரு வார்த்தை

மருமகன்,

மானிப்பாயருக்கு!

தயவு செய்து உமது கையை வைத்துக் கொண்டு சும்மாயிரும். காரியாலயங்களில் கடுதாசிப் பஞ்சம் தலை காட்டியுள்ளது. பொய்யும், புழுகும் எத்தனை நாளைக்கு? உம்மைப் போல் எத்தனை பெரும் புள்ளிகள் முளைத்த இடம் தெரியாமல் மங்கிப் போய்விட்டனர்? நீர் எம் மாத்திரம்?

சும்மா இரும்.

—அம்மான்.

## "சம்திங்" பெறும் பெரும் புள்ளிகள்

மட்டக்களப்பு தொழிற்சாலையிலும், கலால் இலாகாவிலும் குடிபுகுந்துள்ள வாழைக்காய் சந்திக்கு இழுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பு சிவில் தொழிலாளர் சங்கத்தில் ஒரு பெரும் பூசலை உண்டாக்கக்கூடிய வகையில் மேற்படி இருஇலாக்காஉயர் பதவியாளர்களிற்சிலர் "சம்திங்" இற்காக சில விஷமத்தனங்களைப் புரிந்துள்ளனர். ஒழுங்காக நடந்து கொண்டு பெரிய பதவி வகிக்கும் பெரிய மனிதர்கள், பெரிய மனது காட்ட வேண்டியிருக்க, சிறுமதியால் சிறு செயல்கள் புரிந்து, சொந்த நலம் தேடுவது, இன்றுள்ள சூழ்நிலையில் சிக்கலை வளர்க்கும்.

உங்கள் ஊர்ச் செயல்களை நீக்கி, அதற்கான பிராயச்சித்தம் தேட உடனே முயற்சி எடுக்காவிடில் நிச்சயம், தக்க ஆதாரங்களோடு சந்திக்கு இழுக்கப்படுவீர்கள்.

## தேர்தலன்று தருமரும் சுந்தரரும்

மூதூரில் தேர்தல் நடைபெற்ற அன்று, உடுவில் பிரதிநிதி திரு. தருமலிங்கம் ஒரு தேர்தல் சாவடி அருகே நின்றிருந்தார். அவருடைய நெஞ்சில் தமிழரசுக் கட்சியின் மூவர்ணச் சின்னம் தென்பட்டது. அங்கே ஒரு "ஜீப்பில்" வந்திறங்கிய சுந்தரலிங்கம், திரு. தருமலிங்கத்தின் அருகில் சென்று "வாக்களிப்பு நிலையத்திற்கு 200 யாருக்கு அப்பால் போய்விடு. இங்கு நின்றால் நீ ஒரு குற்றவாளி. போலிசாரிடம் உம்மை ஒப்படைப்பேன்" என்றார். திரு. சுந்தரலிங்கத்தின் ஜீப் வண்டியையும், அதில் பொறித்திருந்த அவரது தேர்தல் சின்னத்தையும் காண்பித்து, "இதோ உமது 'ஜீப்' வண்டி இங்கே நிற்பதைப் போலிசார் பார்த்தால் உங்கள ஜீப்புக்கே ஆபத்து வந்துவிடும். ஓடுங்கள் இவ்விடத்தை விட்டு" என்று கூறினாராம்.

பிறகு அங்கே சுந்தரர் ஏன் நிற்கப்போகின்றார்?

## கல்வி அதிகாரி கூறிய சேதி

அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட கல்லூரி அதிபர்களுக்கெல்லாம் ஓர் மாநாடு நடைபெற்றது. மாநாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட கல்வி அதிகாரி ஒருவர் சில பல உண்மைகளை ஒளிவு மறைவின்றிக் கூறியுள்ளார்.

பொய் சொல்லுதல், ஏமாற்றுதல், வேஷம் போடுதல், நம்பிக்கைத் துரோகம், நயவஞ்சகம் முதலிய நாசகார வேலைகள் அனைத்திலும் தான் கைதேர்ந்தவர் என பதைப் பட்ட வர்த்தமானமாக நெட்டத் தெளிவாக கல்லூரி அதிபர்கள் முன்னிலையில் கூறினராம்.

அவர் ஒரு சிறந்த சைவர். கடவுள் பக்தியுள்ளவர். தனது பட்டம் படிப்பு பூர்த்தி செய்வதற்காக எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை எதைப்பற்றியது தெரியுமா? "சிறீதவர்களின் கல்வித் தொண்டு" என்பதுதான். லண்டன் சென்றபோது தான் பட்ட துன்பங்களை எடுத்துக் கூறியுள்ளார். அங்கு அவருக்கு இருப்பிட வசதி நன்றாக அமையவில்லையாதலால், மெதெடிஸ்த மிஷனைச் சேர்ந்த மாணவர்கள் மட்டும் தங்குவதற்காக அமைக்கப்பட்டிருந்த விடுதியில் சேர்ந்து கொண்டார். தான் ஒரு மெதெடிஸ்த சபையைச் சேர்ந்தவன் என்று பொய் கூறி இடம் பிடித்துக் கொண்டாராம், தவறுமல் மதச் சடங்குகளிலும் பங்கு கொண்டாராம். புனிதக் கடன்கள் பல நிறை வேற்றியபின்னர் தூய்மையுடனும், பயபக்தியுடனும் பெறப்படும் "சற்பிரசாதத்தை"யும் பெற்றிருக்கின்றார்.

சுயநலத்துக்காக ஆண்டவனின் பீடத்திலும் பொய்யுரைத்துள்ளார். சந்தர்ப்பத்துக்காகவோ, தவறுதலாகவோ இம்முயற்சிகளில் ஈடுபட்டிருக்கலாம். ஆனல் அதை ஒரு "பெரிய செய்கை" என்று கருதும்படி ஒரு கற்றறிந்தோர் சபையிலும் கூறி, அச்செயல்களை ஆதாரமாகக் காட்டி, அதன்படி ஒழுகுவதே நன்றென றும் கூறியுள்ளார்.

(13-ம் பக்கம் பார்க்க)

### 58-ல் நடந்தது மீண்டும்...?

மன்னார் தபால் காரியாலயத்தில் இரு சிங்களவர்கள் ஒரு காரியமாகச் சென்றிருந்தனர். தற்செயலாக அவர்களுடைய காரியம் முடியத் தாமதம் ஏற்பட்டது. கோபமுற்ற இருவரும் மந்திரி சலுகைகளுக்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளனர். எப்படித் தெரியுமா?

"உடனடியாக மன்னார் போன்ற பகுதிகளில் சிங்களத்தில் மட்டும் கடமை பார்க்கும் உத்தியோகத்தர்களை அனுப்பவும், இல்லையேல் 1958-ஐ நடத்தியதைப் மீண்டும் நடத்தி வைப்போம். என்று எச்சரிக்கிறோம்."


அநேக மக்களால்
தேர்ந்தெடுக்கப்படுபவை;
லதா மணிப்புரி சாரிகள்!!



லதா
மணிப்புரி
சாரிகள்;

முற்றிலும் புதிய பிளேன்; அன்றெய்ட் நிறங்களில்; அழகிய தங்க நூலிழையிலான இழைத்தேய டிசைன்களாலும் 3" போடர் நெடுகிலும் தங்க நூலால் இழைக்கப் பட்ட டிசைன்களாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

45" X 6 யார்

சாரிகளுக்கேற்ற பிளவுஸ் புடவைத் துண்டுகளும் உண்டு.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானொலி வர்த்தக ஒலி பரப்பில் குண்டன் மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

எலைட் சுப்பர்லோன்
வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:-
குண்டன்மால்ஸ் லிமிட்டெட்

மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்சர் வீதி.
சில்லறை விற்பனைப் பகுதி: 110 & 114, மெயின் வீதி,

கொழும்பு.

—Mylads/KL. 350


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி ஆட்சி கோரி பாகிஸ்தானில் கிளர்ச்சி

## ஒன்பது தேசியத் தலைவர்களின் ஒருமித்த வேண்டுகோள்

### எம். பிக்கள், மாணவர்கள் ஆதரவு

பாகிஸ்தானில் பரிபூரண மாகாண சுயாட்சியுடன் கூடிய சமஷ்டி அரசாங்கமொன்று அமைக்கப்பட வேண்டும் என்று கோரி கிழக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த தேசியத் தலைவர்கள் ஒனபது பேர் ஒரு கூட்டறிக்கை விடுத்துள்ளனர்.

கிழக்கு பாகிஸ்தான் சட்ட சபை உறுப்பினர் 17 பேர்களும், டாக்கா பல்கலைக் கழக மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகள் 19 பேர்களும் இந்த அறிக்கைக்குத் தங்களின் பூரண ஆதரவை அளித்துள்ளனர்.

"பரிபூரண மாகாண சுயாட்சியுடன் கூடிய சமஷ்டி அரசாங்கமொன்று பாகிஸ்தானில் அமைக்க வேண்டும். பாக். மக்களுக்கு அடிப்படை உரிமைகளை வழங்கும் ஒரு ஜனநாயக அரசியற் சட்டம் இயற்றப்பட வேண்டும். கிழக்கு, மேற்கு பாகிஸ்தான்களிடையுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வு அகற்றப்பட வேண்டும்" என்று கி. பாகிஸ்தான் தேசியத் தலைவர்கள் 9 பேர் சேர்ந்து விடுத்துள்ள ஓர் அறிக்கை கூறுகிறது.

ஒன்பது தலைவர்களின் கருத்து பாக். மக்களின் கருத்து என்றும், நாடு பூராவிலுமுள்ள மாணவர்களின் கோரிக்கையும் அதுதானென்றும் டாக்கா பல்கலைக் கழக மாணவர் பிரதிநிதிகள் கூறினர்.

கிழக்கு மேற்கு பாகிஸ்தான மக்கள் சமய அடிப்படையில் ஒன்றுபட்டிருந்தாலும் கூட இன, மொழி அடிப்படையில் வேறுபட்டிருப்பதால், பாக். முஸ்லிம் சமுதாயம் என்றென்றும் ஐக்கியமாக வாழ்வதற்கு சமஷ்டி ஆட்சி முறை அவசியமென்று கருதத் தொடங்கிவிட்டனர். அதன் விளைவே கிழக்குப் பாகிஸ்தானில் தற்போது எழுந்துள்ள கிளர்ச்சி.

## நாடற்றவர் மறுப்பு மாநாடு

### தி. மு. க. ஏற்பாடு

இலங்கைக்கு பாரதப் பிரதமர் நேரு அவர்கள் வருவதற்கு முன்னதாக "நாடற்றவர்" பிரச்சினையில் இந்நாட்டு மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயம் எத்தன்மையது என்பதை ஆராயும் பொருட்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு மாநாட்டைக் கூட்டவுள்ளது. பண்டாரவளை நகர மண்டபத்தில் 15-7-62 இம் மாநாடு நடைபெற விருக்கிறது. இம் மாநாட்டில் பங்கு கொள்ளும் படி பல அரசியற் கட்சித்தலைவர்களும் கேட்கப் பட்டுள்ளார்கள். இம் மாநாட்டை திரு செல்லையா இறந்துவைப்பார் என்று தெரிகிறது.

### கறையானின் தொல்லை!

எகிப்து பெஹிரா மாகாணத்தில் உள்ள 5 கிராமங்களில் கறையான்களின் படையெடுப்பால் பல வீடுகள் நாசமாயின; நான்கு குழந்தைகள் கொல்லப்பட்டனர். இந்தக் கிராமங்களில் வாழும் 5000 மக்கள் இதனால் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

ஜெனிவா:

## தொழிலாளர் மாநாட்டில் இ. தொ. கா. பிரமுகர் இராமானுஜம்

### ஆளும் கட்சியை பாராட்டியவர் அநீதிகளைச் சொல்ல வில்லையே!

ஜெனிவாவில் நிகழ்ந்த சர்வதேசத் தொழிலாளர் மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாகச் சென்றிருந்த இ. தொ. க. பிரமுகர் திரு. டி. இராமானுஜம், ஆளும் கட்சிக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு வந்துள்ளார். விவசாயத் துறையிலும், கைத்தொழில் வளர்ச்சியிலும் தற்போதைய அரசாங்கம் சிரத்தை அதிகம் காட்டி மக்களுக்கு நல்வழிவகைகளை ஆக்கித்தருகிறது என்றும் கூறியுள்ளார்.

தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிக்கு மேல் அடிவிழுந்து கொண்டிருக்கிறது. நாடற்றவர்களாக, நாதியற்ற நிலையில் அம்மக்கள் நிராதரவாக விடப்பட்டுள்ளனர்.

(12-ம் பக்கம் பார்க்க)

## கவிதைப் பூங்கா

### விமர்சனம்

—"மஹாகவி—"

விடிகையில் ஒருபால் விரிவுறு கிறது
கடிமலர்; நிறமே கவர்கிற தயலே;
முடிவெது பிறநாம் அடைவது?- முதிய
கடவுளி னதுப ஓர் கலை உளம். அடடா!

முழுமை எய் தியபே ரழகு நமதிரு
விழிகளின் எதிரில் விரிகையில், உருகி
அழ, அதை உணவு கழுதை செய் ததுபார்:
கழுதையும் அடடா, கலைவிமர் சகரா?

—|—

வான்கொண்ட விழியார் யாரே
வடிவினை முடியக் கண்டார்?
—கம்பன்.

### சுவிகல்பக் காட்சி!

—உள்ளூர் மு. வேலுப்பிள்ளைப் பாவலர்—

தேன்கண்டார் தேனே கண்டார்;
திண்ணையில் இருந்த பொன்னர்
'சூள் கொண்டு வாரும்' என்றார்
சுவருக்கும் அப்பால் நின்று:
நீள்கெண்டை விழியி னாளோ
நெடிலோசை யுடனே கூவ,
வாள்கொண்டு வருவேன் என்று
வைத்திய லிங்கம் போனான்.


'மூலைக்குட் புகுந்த தேனோ
முன்வைத்த தனது சொந்தக்
காலினை அப்பால் ஊன்றக்
கருதிற்றுப் போலும்!' என்று
வேலப்பர் சொல்லிக் கொண்டு
வெளியாலே நழுவி விட்டார்;
மாலைக்கு மயக்கம் தோன்ற
வெயிலவன் மறைந்து போனான்.

'விளக்குமா றெடுத்து வாரும்;
விடுவதா? முடிக்க வேண்டும்;
துளியுமே அஞ்சேன்!' என்று
சுந்தரம் மெல்ல வந்தான்.
துளக்கமுற் றதனை நோக்கித்
துணுக்குற்ற மாந்தர் எல்லாம்
களிப்புறு மாறே ஆங்கு
கனகம்மா மாமி வந்தாள்.

'மண்ணெண்ணெய் போத்தல் எங்கே?
எடுத்துவா; அதனை வார்த்தால்,
கண்ணுனை, எந்தத் தேனும்
கட்டாயம் செத்துப் போகும்;
அன்னையின் நிவசந் தன்றும்
அதைத்தானே செய்தோம்?' என்றாள்;
உண்மையை விளக்கி நின்றாள்,
ஒருவரும் அசைந்தா ரில்லை.

சின்னவன் விளையாட் டாலே
திரும்பிவந் தங்கு சேர்ந்தான்;
'என்னாங் கதி?' என் றேகி
எதிருற்ற மூலை புக்கான்;
அன்னவன் கையால் அந்த
அழகான தேளைத் தூக்கும்
தன்மையைக் கண்டோர், 'செத்த
தேள்!' என்றார் தலை குனிந்தார்.


## சீபர்லிங் டயர்கள்



சீபர்லிங் டயர்களை உங்கள் கார், பஸ், லாரிகளுக்கு மாட்டி அதிக லாபமடையுங்கள்.

உறுதிக்கும் நீடியகால பாவனைக்கும் உத்தரவாதமுள்ளது.

இங்கிலாந்தில் தயார் செய்யப்பட்டது

ஏக விநியோகஸ்தர்கள்:-

A S S. சங்கரலிங்கம்பிள்ளை அன் கோ. லிமிடெட்.,
136, பஞ்சிகாவத்தை ரோடு,
தபால் பெட்டி நிர். 435,
கொழும்பு-10.

போன்: 4491

தந்தி : "TYRETUBE"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயர் நினைவுப் பள்ளி துவக்க விழா

"நாட்டுக்கும் தொழிலாளர்களுக்கும் உண்மையாக உழைத்தவர்களிலே, காலஞ்சென்ற திரு. கே. நாயர் மிகவும் முக்கியமானவர். மலை நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக அவர் செய்த அரும் பணிகள் அளவிட முடியாதன. அந்த மேதையின் நினைவாகவே இப்பள்ளிக் கூடம் உருவாவதிலும், அதை அவரது முக்கிய நண்பரே பொறுப்பேற்றிருப்பதிலும் நான் அதைத் துவக்கி வைப்பதிலும் பெருமைப்படுகின்றேன். இங்கு பயில வரும் மாணவ மாணவிகள் திரு. நாயரின் கொள்கை வழி நடந்து அவரது எண்ணங்களையும் திட்டங்களையும் மக்களிடையே பரப்ப வேண்டும்."

இவ்வாறு எட்டியாந்தோட்டை பருசல்ல வீதியில் துவக்கப்பட்டிருக்கும், "நாயர் நினைவுப் பள்ளி" துவக்க விழாவில் குத்துவிளக்கேற்றி வைத்துச் சொற்பொழிவாற்றிய வழக்கறிஞர் திரு. டி. டப்ளியு. இராசரத்தினம் கூறினார். வழக்கறிஞர் சம்பந்தன் அவர்களும் திரு. நாயரின் பெயரால் துவக்கப்பட்டிருக்கும் நற்பணியை வரவேற்றும் ஆதரித்தும் பேசினார்.

விழாவில் முதலில் எல்லோரையும் வரவேற்றுப் பேசிய திரு. டி. எம். பீர்முகமது "நாயர் பெயர் நாட்டில் நிலைத்து நிற்கவும், அவரது கொள்கைகள், எண்ணங்கள் மக்கள் மனதை விட்டகலாதிருக்கவும், இப்

(13-ம் பக்கம் பார்க்க)

# கட்சியின் வெற்றியே என் வெற்றி

## உரிமை மீட்கும் பணியில் ஒன்றிவிட்டனர் மக்கள்

### ஐனுப் முகம்மதலி நன்றி கூறுகிறார்

"சென்ற காலத்தில் நடைபெற்ற சத்தியாக்கிரக இயக்கங்களில் எமது கிண்ணியா மக்கள் ஆண் பெண் குழந்தைகள் என்ற பேதமின்றிப் பங்குபற்றியதின் மூலம் தாய் மொழி உரிமை மீட்கும் புனிதப்பணியைச் செய்ய முன்வந்து விட்டனர் என்பதை வெளிப்படுத்தியுள்ளனர். இன்று கிடைத்துள்ள வெற்றி எமது கட்சிக்குக் கிடைத்துள்ள வெற்றியேயாகும்." இவ்வாறு தேர்தல் முடிவுகளைக் கவனித்துவிட்டு கிண்ணியாவுக்குத் திரும்பிய தமிழரசுக் கட்சியின் மூதூர் பாராளுமன்ற முதல் பிரதிநிதி ஐனுப் முகமதலி தமது வீட்டில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்தில் திரண்டு நின்ற மக்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

ஐனுப் முகமதலி நீரோட்டு முனை என்னும் படகுத்துறையில் வைத்து வரவேற்கப்பட்டார். தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினரான ஐனுப் முகமதலியை வரவேற்க மக்கள் வெள்ளமாகப் படகுத்துறைக்குத் திரண்டு வந்திருந்தனர். வீதிகள் மகர தோரணங்களாலும் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடிகளாலும், பூரண கும்பங்களாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தன. மேற்படி துறையில் இருந்து நில பாவாடை இட்ட வீதிகள் வழியாக மக்கள் கூட்டம் புடைசூழ ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். வழிநெடுக ஆண் பெண் குழந்தைகளைக் கொண்ட மக்கள் கூட்டம் கூடி நின்று முகமதலிக்கு மாலையிட்டு தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். ஐனுப் முகமதலி அவர்கள் கூப்பிய கரங்களுடன் மக்களுக்குத் தமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டே பவனி வந்தார். பட்டாஸ் வேட்டுகள் ஊரையே அதிர வைத்தது.



ஐனுப் எம். ஈ. எச். முகம்மதலி

#### உங்களுக்கு என் நன்றி

ஐனுப் முகமதலி மேலும் கூறியதாவது: எனக்கு மாலையிட்டு மரியாதை செலுத்தும் உங்கள் பேரன்பு என் மனதை உருகச் செய்கிறது. உண்மையிலே மூதூர்த் தொகுதியில் உள்ள வாக்காளப் பெருமக்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப் பூண்டவன் நானே தான். மதிப்புக்குரிய வாக்காளப் பெருமக்களுக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மூதூர் இடைத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டி இட்ட எமது நண்பர். திரு. ஆர். எம். குணதிலகா எனது வெற்றியை இட்டு மகிழ்ச்சி தெரிவித்துள்ளதுடன், இத்தொகுதியில் வதியும் சிங்கள மக்களின் நலன்களும் பாதுகாக்கக் கூடிய முறையில் நான் கடமையாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். எல்லோருக்கும் சமமாகச் சேவை செய்வதே எனது இலட்சியமாகும். இந்த நாட்டில் வதியும் சிங்களச் சகோதரர்களுடன் நேசபான்மையுடன் இணைந்து வாழும் திட்டத்தையே எமது கட்சி வலியுறுத்தி வருகிறது.

தமிழ் மொழி முஸ்லிம்களின் தாய் மொழி என்பது மறுக்க முடியாத உண்மை. தாய் மொழியான தமிழ் வாழ்ந்தால் தான் நாம் வாழ முடியும். நமது தாய் மொழி உரிமைக்காக நம் பங்கைச் செய்ய வேண்டிய தருணம் வந்து விட்டது. சமீபத்தில் நடைபெற்ற இடைத்தேர்தலில் இத்தொகுதியில் வாழும் தமிழ்ப் பெருமக்கள் முஸ்லிம்களுக்கு சிறந்த முன்மாதிரி ஒன்றை எடுத்துக் காட்டியுள்ளனர். அவர்களுக்கு என் நன்றி உரியதாகும். இத்தேர்தலில் போட்டியிட்ட திரு. சுந்தரலிங்கம் ஒரு தமிழர் என்பது மட்டும் இன்றி ஒரு தலைசிறந்த கல்விமானும், அரசியல் மேதையும் ஆகும் என்பது யாவரும் நன்கறிந்துள்ள ஒரு விஷயமாகும். அப்படி இருந்தும் தமிழ்ப் பெருமக்கள் அவரது போக்கை முற்றாக நிராகரித்ததின் மூலம் இன்று நடைபெறும் போராட்டம் தமிழர்களின் தனிவிஷயமல்ல, தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கும் சகல மக்களினதும் பொதுவான புனிதக்கடமை என்பதை எடுத்து உணர்த்தி உள்ளனர். எனவே கிண்ணியா வாழ் எனதன்பிற்குரிய சகோதரர்கள், நடந்து போன தேர்தல் சம்பவங்களை மறந்துவிட்டு நம்முடையவும் நம் இளம் சந்ததியினர்களுடையவும் நல்வாழ்வுக்காக ஒன்றுபட்டு உழைக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், என்ருர்.

## ஒரு கல்லுக்கு 100 வாக்குகள்

கிண்ணியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் தலைவர்கள் பேசும் போது கல்லெறியப்பட்டன. காடையர்கள் செய்யும் இந்தக் கல்லெறிக் கூத்து கட்சிக்கு மென்மேலும் ஆதரவையே தேடித் தரும் என்று வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு அமிர்தலிங்கம் கூறியது மெய்யாகிவிட்டது.

கிண்ணியாவில் தமிழரசுக் கட்சி பிரசாரக் கூட்டம் நடைபெறு முன்னர் ஏறத்தாள சரிசமமான ஆதரவு ஐனுப் முகம்மதலிக்கும், ஐனுப் ஹமீதுக்கும் இருந்தது. திரு. அமிர்தலிங்கம் பேசும் போது கற்கள் வீசப்பட்டன. அப்போது "இங்கு எறியப்படும் ஒவ்வொரு கல்லும் எங்கள் கட்சி அபேட்சகருக்கு 100 அதிகப்படி வாக்குகளையே கொண்டுவரும்." என்று திரு. அமிர்தலிங்கம் கூறினர். அவ்வார்த்தை உண்மையாகிவிட்டது. சம்பவம் நடைபெறு முன்னர் 50க்கு 50 ஆக இருந்த இடத்தில், கல்லெறியப்பட்ட பின்னர், ஐனுப் முகம்மதலிக்கு 100க்கு 75 வாக்குகள் கிண்ணியாவில் மட்டும் கிடைத்துள்ளன என்று தெரிகிறது.


எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரும்

ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்.

இளம் பிராயத்திலே உண்டாகும் பித்த நரை, தலை மயிர் செம்பட்டை, புழுவெட்டு மண்டையிடி, பீனிசம், தலைசுற்று, காது செவிடு முதலியவைகளை ஓரே நாளில் போக்குவதுடன் ரோமத்தை கறுத்த நிறத்தோடு நீண்டு அடர்த்தியாகவும் வளரச் செய்யும்.

இதற்கு அத்தாட்சியாக கீழே குறிப்பிடும் நற்சாட்சியை வாசியுங்கள்.

Ayur. Dr. T. H. மதுரநாயகம்,
வைத்தியராஜ் M/s T. D. மதுரநாயகம் & கோ.,
ஞானசுந்தர வைத்தியசாலை,
கொழும்பு.

கதிர்காமம், 12-4-1962

ஐயா,

இன்று எனக்கு 85 வயதாகிறது. நான் கடந்த 55—60 வருடகாலமாய் ஞானசுந்தர வைத்தியசாலையில் பல விதமான வியாதிகளுக்கு வைத்தியம் செய்வித்து, பலவித தயாரிப்பு மருந்துகளும் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறேன். பூரண சுகமடைந்திருக்கிறேன். முக்கியமாகத் தங்களின் கருணைக்கிழங்கு லேகியம், ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம், ரிஷி சாலாமிஸ்ரி லேகியம் மிகவும் கைகண்டது.



இங்ஙனம்
லெச்சுமணன் சாமியார்

6 அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 3-00
12 அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 5-75

தபாற் செலவு முறையே -/85, 1-50.

ஞானசுந்தர வைத்தியசாலை,
T. D. மதுரநாயகம் & கோ.,
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

விபரமடங்கிய கெட்லாக் இனமாக அனுப்பப்படும்.


# பொதுஜன வாசிகசாலைக்கு தமிழ் புத்தகங்கள் இனி இல்லை

## தலைநகரில் தமிழினத்தின் உரிமைகளைப் பறிக்கும் மற்றொரு முயற்சி

### கொழும்பு நகர சபையில் தான்தோன்றித் தர்பார்

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை எந்தெந்த வகைகளில் பிடுக்கலாமோ, அந்தந்த வழிவகைகளிலெல்லாம் பறித்து விடுகின்றனர். ஆட்சி பீடமேறிய ஆளும் கட்சியினர் மட்டும்தான் இந்தக் கைங்கரியத்தைச் செய்கிருர்கள் என்று சொல்வதற்கில்லை. சிங்கள உறுப்பினர்களைப் பெருவாரியாகக் கொண்ட சகல கட்சிகளும் இம் முயற்சியில் முன்னணியில் நிகழ்கின்றன. யூ. என். பிக் கட்சி சார்புடைய கொழும்பு மாநகர சபையின் பொதுஜன வாசிகசாலையிலேயே தமிழ் ஒதுக்கப்பட்டுவிட்டது.

கொழும்பு மாநகரில் ஏறத்தாழ 50 சத விகிதமான தமிழ் பேசும் மக்கள் வசிக்கின்றனர். கொழும்பு மாநகரசபை அலுவல்கள் அனைத்தும் சிங்களத்தில் மட்டும் நடைபெற வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழ் பேசும் மக்கள் மிகவும் துன்பத்துக்குள்ளாகியுள்ளனர்.

மாநகர சபையால் நடத்தப்படும் பொது ஜன வாசிகசாலையில் இனிமேல் தமிழ் புத்தகம் எதுவும் வாங்கப்பட மாட்டாது. வருடா வருடம் தமிழ், சிங்களம், ஆங்கிலம், பிற மொழிகளுக்கான புத்தகங்கள் வாங்கு[illegible] படும். அடுத்த வருடத்திலிருந்து தமிழ் புத்தகங்கள் வாங்குவதற்கான பணம் ஒதுக்கப்படமாட்டாது என்று கமிஷனர் அறிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபை யூ. என். பி. கட்சியின் செல்வாக்குடன் இயங்கி வருவது. இலங்கைத் தமிழரசுக் கட்சியினர், யூ. என். பி. கட்சியுடன் கூட்டுச் சேர்ந்திருந்தால் நன்ருயிருக்குமே என்று கனவு காணும் பலர் இன்றும் இருக்கின்றனர். தமிழ் பேசும் இனத்தின் நலன்களைப் பறித்தெடுத்து, அதனால் பெருமை தேடிக்கொள்வதில் இன்பம் காண்பவைதான் யூ. என். பி. [illegible]சி முதலாம் மற்றும் பல கட்சிகளும், என்பது புலனுகிவிட்டது.

#### தேர்தல் பதில் அளிக்கும்?

கொழும்பு மாநகர சபை அலுவல்கள் யாவும் சிங்களத்தில் மட்டும் நடைபெற வேண்டும் என்ற பிரேரணையை முதன் முதலில் பிரேரித்தவர் கொட்டாஞ்சேனைத் தொகுதிப் பிரதிநிதியான திரு. அபயகுணவர்த்தன. கொட்டாஞ்சேனைத் தொகுதியில் தமிழ் பேசும் வாக்காளர்கள் அதிகமாக உள்ளனர். அவர்களுடைய வாக்குகளைப் பெருமல் எவரும் அத்தொகுதிக்குப் பிரதிநிதியாக வருவது கடினம். கடந்த தேர்தலில் திரு. அபயகுணவர்தனவுக்கு ஆதரவு தேடித் தந்தவர்களும் தமிழ் பேசும் மக்களே என்பதை இன்று அவர் உணராமலிருக்கலாம். அண்மையில் வரப் போகும் தேர்தல் நிச்சயம் இந்த உண்மையை வெளிப்படுத்தும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைநாட்டில் பெருகி வரும் தமிழர் பலம்

## தடுத்து நிறுத்த சிங்களவர்களை குடியேற்றத் திட்டம்

### மந்திரிசபைக்கு நுரேலிப் பிரதிநிதியின் மகஜர்

மலை நாட்டுத் தமிழர்களின் உரிமைகள் பறித்தாகிவிட்டன. ஆனால் அவர்களின் எண்ணிக்கை தானே அதிகரித்து வருகிறதே! அதைக் கட்டுப்படுத்துவது எப்படி? இந்தப் பிரச்சினை ஆளும் கட்சியில் ஒரு கும்பலுக்குப் பெரும கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதற்கான ஒரு திட்டத்தை நுரேலி எம். பி. தீட்டியுள்ளார்.

"மலைநாட்டுச் சிங்களவர் வேறு பிரதேசங்களுக்கு குடிபெயர்ந்து சென்றுவிட்டதால் மலைநாட்டிலே சிங்கள இனம் அழிந்து வருகிறது. தமிழர் பலம் அதிகரித்து வருகிறது. அதனால் நாடு பிரிக்கப்படுவதோடு தேசிய நிலைகளும் பிரிக்கப்பட்டுவிடும். ஆகவே நகரங்களிலே தெருக்களில் வாழும் சிங்களவர்களைக் கூட்டம் கூட்டமாகக் கொண்டு வந்து மலைநாட்டில் குடியேற்றும் ஒரு தூரதிருஷ்டியுள்ள திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்" என்று நுரேலி எம். பி. திரு. டி. விலியம் பர்ணாந்து பிரதம மந்திரிக்கும், மந்திரிசபைக்கும் சமர்ப்பித்துள்ள ஒரு மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

நுரேலி எம். பி. தனது மகஜரில் மேலும் கூறுவதாவது:—

நாட்டிலே பல்வேறு பகுதிகளிலுள்ள குடியேற்றத் திட்டங்களில் மலைநாட்டுச் சிங்கள மக்களைக் கொண்டுபோய் குடியேற்றியதால் மலைநாட்டில் சிங்கள இனம் அழிந்து வருகிறது. அதனால் மலைநாட்டில் தமிழர் பலம் பெருகி வருகிறது.

இதன் விளைவாக நாடு பிரிந்து, தேசிய இனங்களும் பிரிந்து இலங்கையரின் (சிங்களவர்களின்) எதிர்காலம் இருள் சூழ்ந்து போவது தான்.

#### சிங்களக் குடியேற்றம்

ஆகவே மலைநாட்டுப் பகுதிகளில் குடியேற்றத் திட்டங்களை நிறுவி, நகரங்களிலிருந்து சிங்களவர்களைக் கூட்டம் கூட்டமாகக் கொண்டு வந்து அவற்றில் குடியேற்றிவிட்டால், போராட்டமின்றியே தமிழர் பலத்தை நொறுக்கித் தள்ளி, சிங்கள மக்களின் (இலங்கையரின்) பாதுகாப்பையும் உரிமைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

#### வர்த்தகத்தைக் கைப்பற்றுதல்

மலைநாட்டுத் தோட்டப் பகுதிகளிலே வியாபாரம் முழுவதும் தமிழர்கள் கையிலேயே இருக்கிறது. இதற்கு அரசாங்கம் செய்ய வேண்டிய பரிகாரம், மலைநாட்டிலுள்ள வியாபாரக் கடைகளெல்லாம் சிங்களவர்களுக்குச் சொந்தமாகக் கூடிய ஏற்பாடுகளைச் செய்வதும் அக் கடைகளை நடத்துவதற்காகச் சிங்களவர்களுக்குப் போதிய உதவிகளைச் செய்வதுமாகும்.

#### எண்ணிக்கை கண்டு கலக்கம்

நுரேலி எம். பி. யின் திட்டம் அமுல் நடத்தப்பட்டால் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டுள்ள மலை நாட்டுத் தமிழர்களின் எண்ணிக்கை பெருகி வருவதைக் கண்டு சிங்கள வகுப்புவாதிகள் அஞ்சி நடுங்குகின்றனர். வடகிழ மாகாணங்களில் சிங்களவர்களைக் குடியேற்றியதைப் போல மலை நாட்டிலும் சிங்களவர்களைக் குடியேற்றித் தமிழர் பலத்தை நசுக்கிவிட எண்ணுவது தான் அவர்களின் தந்திரமான திட்டம்.

## வன்னிநாடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்க அதிபர் திரு. செனவிரத்ன என்று கூறப்படுகிறது.

இச் சதித்திட்டம் நிறைவேற்றப்படுமானால், வவுனியா பட்டினத்தைச் சேர்ந்த இடங்களும், வவுனியா மாவட்டத்தின் ஒரு கணிசமான பகுதியும் சிங்களப் பிரதேசமாக மாறிவிடும். பின்னர் இந்தப்பகுதியையும் மதவாச்சிப் பகுதியையும் சேர்ந்து, தனி ஒரு கச்சேரி மதவாச்சியிலோ, செப்பெட்டிப் கொல்லுவாவிலே நிறுவுதல் சாத்தியமாகும்.

#### "சிங்கள ராஜதுரை"

இத்திட்டத்தை மிகச்சாதுரியமாகவும் திறமையாகவும் நிறைவேற்ற முனைந்துள்ள வவுனியா அரசாங்க அதிபர் திரு. செனவிரத்னவை ஒரு "சிங்கள ராஜதுரை" என்று வர்ணித்துக் கொள்கிறார்.

தங்களின் சொந்தப்பூமி பறிபோகும் இத்தருணத்திலே தமிழ் பேசும் மக்கள் மிக விழிப்புடன் செயலாற்ற வேண்டியது அவசியமாகும்.

தமிழ் பேசும் மக்கள் வவுனியாவைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் தங்களுக்குக் காணி வழங்குமாறு கோரி எகோபித்து குரலெழுப்ப வேண்டும். தமிழ் பேசும் மக்கள் உடனடியாக இம்முயற்சியில் இறங்கி, தொடர்ந்து போராடிக் காணிகளைப் பெற்றுக் கொள்ளாவிடின் வவுனியா சிங்களப் பிரதேசமாக மாறுவதைத் தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும். இதில் தாமதம் கூடாதென தமிழ் பேசும் மக்களைச் "சுதந்திரன்" எச்சரிக்க விரும்புகிறது.

## புலமைப் பரிசில் வழங்குவதில் ஏன் இந்தப் பாரபட்சம்?

### கல்வி மந்திரியிடம் திரு. எஸ். ஜே. வி. புகார்

இலங்கைப் பல்கலைக் கழகத்தினர் நடாத்திய 1961ம் வருடப் பல்கலைக் கழகப் பரீட்சைகளின் முடிவுகளின் பிரகாரம் அளிக்கப்பட்ட புலமைப் பரிசிலில் தமிழ் மாணவர்களுக் கெதிராகப் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகத் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கல்வி மந்திரிக்குப் புகார் செய்து எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி, உயர்தரக்கணிதம், விஞ்ஞானம், எந்திரயியல் ஆகிய துறைகளில் தமிழ் மாணவர் திறமையாகச் செய்து முதலிடம் பெற்றிருந்த போதிலும், அவர்களுக்குக் குறைந்த தரத்தில் தேறிய சிங்கள மாணவர்களுக்கு புலமைப் பரிசில் (ஸ்கலர்ஷிப்) வழங்கப்பட்டுள்ளது.

உயர்தரக் கணிதத்தில் முதல் வகுப்பில் தேறிய மாணவர் திரு. சண்முகத்துக்கு அதற்குரிய புலமைப் பரிசில் கிடைக்காத வகையில் வழி கோலப்பட்டு, அவருக்கு அடுத்துள்ள திரு. சமரநாயக்காவுக்கு அப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானப் பாடத்துக்குரிய புலமைப் பரிசிலிலும், ரசாயனப் பகுதியில் இரண்டாம் வகுப்பில் தேறிய திரு. தர்மவர்த்தனவுக்கு பரிசில் அளிக்கப்பட்டிருக்கையில், பொது விஞ்ஞானத்தில் முதலாம் வகுப்பில் தேறிய திரு. கணேசனுக்கு அது அளிக்கப்படவில்லை. ஆக திரு. குணசேகராவுக்கு அளிக்கப்பட்ட புலமைப் பரிசிலே தராதரத்தின் படி சரியாக அளிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது விஞ்ஞான புலமைப் பரிசில் விஷயத்திலோ, மீண்டும் பாரபட்சம் தான் [illegible] தியுள்ளது. அதிலும் [illegible] வது ஸ்தானங்களைப் பெற்ற திரு. தெட்சணாமூர்த்தி, திரு. அங்கெற்றல், திரு. சிவப்பிரகாசபிள்ளை ஆகிய தமிழ் மாணவர்களை விட்டு விட்டு, ஏழாவதாக வந்த திரு. ஜயசிரி என்பவருக்கே புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ் மாணவர்களுக்கு எதிராகக் கல்வி இலாகாவில் பாரபட்சம் காட்டப்படுகின்றதென்பதை விளக்கி, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கல்வி மந்திரிக்கெழுதிய கடிதத்தில், 1960ம் ஆண்டிலும் இதுநகைய பாரபட்சம் நடந்ததென்றும், அதைத் தம்முடைய கட்சியினர் நிதி மந்திரியிடம் சுட்டிக் காட்டிய பொழுது, அவர் இனி மேல் அப்படி யொன்றும் நடைபெறுதென்று உறுதி கூறியிருந்தாரென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்வி மந்திரியின் நிரந்தரக் காரியதரிசியும், மற்றவர்களும் தமிழ் மாணவர்களுக்கெதிராக மேற்கொள்ளும் இப்பாரபட்ச நடவடிக்கைகளை அவர்கள் நிறுத்தவும் கூச்சமின்றிச் செய்கிறார்களே என்பதையிட்டுத்தாம் ஆச்சரியப்படுவதாகவும் திரு. செல்வநாயகம் கல்வி மந்திரிக்கு எழுதிய கடிதத்தில் கூறியுள்ளார்.

இவ்விஷயமாகத் தாம் [illegible] தந்தை தெரிவித்துள்ளார்.

#### பத்திரிகை மசோதாவுக்கு ஆசிரியர் எதிர்ப்பு

சென்ற வாரம் நடைபெற்ற கிழக்கு இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் விசேஷ குழுக் கூட்டத்தின் போது, அரசாங்கம் பத்திரிகைகளை எடுக்கும் மசோதாவை எதிர்த்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## தமிழரசுத் தந்தை........

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியாமலிருக்க முடியாது. திரு. செல்வநாயகம் போன்ற தமிழ்த் தலைவர்கள் மேடையில் சிங்களத்தில் பேசினால், சிங்களம் கற்றுக்கொள்ளும்படி தமிழ் மக்களைத் தூண்ட வழிபிறக்கும் என்பதுதான் நிதி மந்திரியின் எண்ணம், எல்லாம் சதித் திட்டங்கள்.

நிதி மந்திரியோ, இதர மந்திரிகளோ என்னதான் குறுக்கு வழியைக் கையாண்டாலும் தமிழ் மொழிக்குரிய அந்தஸ்து கிடைக்கும் வரை தமிழ் பேசும் மக்கள் தங்களின் மொழிப் போராட்டத்தை நிறுத்தவே மாட்டார்கள். சிங்களத்தைப் படிக்கவும் மாட்டார்கள்.

#### ஜனநாயக விரோத செயல்

ஆளும் கட்சிக்கு இதர கட்சிகளைவிட அதிகப்பொறுப்பு உண்டு. அது ஜனநாயக பண்புகளைச் சுட்டிக் காக்க வேண்டிய கட்சி. நேர்மையினின்று தவறுதிருக்க வேண்டிய கட்சி. தேர்தல் சமயங்களில் பேலான தேர்தல் சம்பிரதாயங்களைக் கையாள வேண்டிய கட்சி.

ஆனால் கடந்த உபதேர்தலிலே ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெறுக்கத்தக்க இழிதரமான முறைகளைக் கையாண்டு, ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபட்டது.

#### பாரதூரமான குற்றச்சாட்டு

ஆசிரியர்கள் உட்பட அரசாங்க அதிகாரிகளை தேர்தல் வேலைகளில் ஈடுபடுத்தியதாக ஆளும் கட்சியின் மீது எதிர்க்கட்சிகள் குற்றஞ் சாட்டுகின்றன. இது ஜனநாயக முறைக்கு மட்டுமின்றி சட்டத்திற்கே மாறான செயலாகும். மக்களிடம் செல்வாக்கு இழந்து நிற்கும் ஒரு கட்சிதான் இம்மாதிரியான குறுக்கு வழியைக் கையாள முடியும்.

இது சம்பந்தமாக அரசாங்க சேவைக் கமிஷன் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறதென்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

மந்திரிகள் வாக்காளர்களைப் பகிரங்கமாக மிரட்டி வாக்குகளை பிடுங்க முயன்றதாகவும் செய்திகள் கூறுகின்றன.

அரசாங்கக் கட்சி அபேட்சகருக்கு வாக்களிக்காவிட்டால் அந்தப் பகுதியில் ரஸ்தா, பாலம், போக்குவரத்து வசதிகள் செய்து கொடுப்பதற்காக அரசாங்கம் ஒரு சதம் கூடக் கொடுக்காதென்று மந்திரி திரு. கலுகல்ல ஊதுார் வாக்காளரிடம் பகிரங்கமாகக் கூறினாராம்.

இதே மாதிரி கல்வி மந்திரியும் வாக்காளர்களை மிரட்டுவதில் ஈடுபட்டாராம். இதே தொகுதியில் தோப்பூர் கிராம மக்களிடையே கல்வி மந்திரி பேசுகையில் வாக்காளர்களை மிரட்டியதாகச் செய்தி கிடைத்துள்ளது.

அந்தக்கிராமத்தின் அபிவிருத்திக்காகப் பிரதம மந்திரி ரூ. 2 லட்சம் ஒதுக்கியிருப்பதாகவும், அவர்கள் யாருக்கு வாக்களிக்கப் போகிறார்களென்பதைப் பொறுத்தே அந்தப் பணம் செலவு செய்யப்படுமென்றும், அந்தக் கிராமத்தின் வாக்குப் பெட்டிகள் தனியாக எண்ணிப் பார்க்கப்படுமென்றும் கல்வி மந்திரி அக் கிராம மக்களை மிரட்டியதாகக் கூறப்படுகிறது.

இன்னும் இம்மாதிரி எத்தனையோ தந்திரோபாயங்களும், மிரட்டல்களும் செய்யப்பட்டதாக அனேகமாக எல்லாத் தொகுதியிலிருந்தும் செய்திகள் கிடைத்துள்ளன.



சி. சி. சி.
தாவர
உரப்பசளைக்
கலவைகள்
அதிக விளைச்சலுக்கு
எமது உரப்பசளைக் கலவைகளின் உதவியால் பெருந் தொகையான நல்ல விளைச்சலைப் பெறுவதற்கு நீங்கள் திடமாக நம்பியிருக்கலாம்.
இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவு செய்து எழுதுக:-
கொழும்பு
கொம்மேர்ஷியல்
கம்பனி லிமிட்டெட்,
பசளைப் பகுதி
அக்லண்ட் ஹவுஸ்,
யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழவன் பாக்கியசாலி!

"ஐயோ, என்ரை ராசா!..."

கிழவி குரலிட்டு அழுதாள்; கைகளால் தலையில் மோதி மோதி அலறினாள்:

"என்ரை ராசா!... என்னைத் தவிக்க விட்டுட்டுப் போட்டியே...? நான் இனி என்ன இனி...?" 'படார் படார்' என்று கிழவி தன் தலையைச் சுவரில் மோதிக் கொண்டாள்; வந்திருந்தவர்களில் யாரோ கிழவியைத் தடுத்தார்கள்.

"என்னை விடு மோனை! என்னை விடு......! என்ரை தாலி போச்சுது! என்ரை துரையார் போட்டார்! ஐயோ......ஐயோ! என்ரை ராசா!...... என்ரை அப்பு!......"

பறைமேளங்கள் முழங்கின, காது சவ்வைத் தெறிக்க வைப்பனபோல, 'டாண்......டாண்......' என, பெண்கள் வட்டமாகக் குந்தியிருந்து ஒருவரை, ஒருவர் அணைத்துக் கோர்த்துக் கொண்டு, அழுதார்கள்; எதையெதையோ எல்லாம் சொல்லிப் பிரலாபித்தார்கள்.

கிழவனின் மூத்தமகன், தோய்ந்து விட்டு, நாலு முழக் கோடி வேட்டி ஒன்றை அரையிற் சுற்றி, அதன்மேல் சால்வைத் துண்டொன்றை இறுக்கியிருந்தான். பூணூல் ஒன்று தோளில் தவழ்ந்து மார்பிற் குறுக்காகக் கிடந்தது. கண்களை நீர்ப்படலம் திரையிட மௌனமாக ஐயரின் முன் அமர்ந்திருந்தான். ஐயர் கொடுத்த தெர்ப்பைப்புல்லை விரலில் மாட்டிக் கொள்ளும் போது அவன் கரங்கள் சன்னி கண்டவனைப்போல நடுங்கின.

கிழவனின் இரண்டாவது மகன, முற்றத்தில் வளர்ந்திருந்த மாமரத்தில் தலை சாய்த்துக் கொண்டு, 'விம்மி விம்மி'ச் சுழிருன்; விழிகளி லிருந்து வடிந்த நீர் மாமரத்தின் காய்முரடான அடிமரப் பட்டைகளில் வழிந்து கொண்டிருந்தது. கிழவனின் கடைசி மகன், 'இடி' விழுந்ததைக் கொண்டவனைப்போல வீட்டின் பின்புறச்சுவரிற் சாய்ந்திருந்தான். அவன்கண்கள் எங்கோ நிலைத்திருந்தன.

வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு, கறுட்டைச் சுவைத்தபடி, வெட்டிப் போட்ட பச்சைத் தென்னோலைகளில் ஆண்கள் அமர்ந்திருந்தார்கள்; அவர்கள் பல விஷயங்களையும் பேசிக் கொண்டார்கள்.

"எங்கடை சுப்பிரமணியத்தின்ரை, கடைசிப் பொடியன், மூலைக் கடையிலை சாமான் கட்டிக் கொடுக்கிறுனாம்! ஒரு ஐம்பது ருபா சம்பளம் வருமே...?"

"என்ன...? நம்மடை 'போஸ் மாஸ்ர'ற்றை மோன் கடையிலை நிற்கிறதே...?"

"இதிலை என்ன அதிசயமிருக்கு? இங்கிலண்ட் கவண்மேந்தன், றயில் வண்டி கழுவுற வேலை பார்க்கிறுனாம்! அது தெரியுமே?"

ஐயர் மந்திரங்களை உச்சரித்தார்; தனக்குத் தெரிந்த மந்திரங்களை வாய்விட்டுப் பலத்துக் கூறினார்; தெரியாதவற்றை வாய்க்குள் கொமுணு முணுத்துக் கொண்டார்.

பெண்கள்பகுதியில் அழுகைக் குரல் சற்று ஓய்ந்தது; கிழவிதான் அழுதுகொண்டிருந்தாள்.

"அங்கை பார், செவிட்டுச் சின்னையற்றை பொடிச்சி இருக்கிறுள்......?"

"யார் அந்த ஓடிவவளே...?"

"அவளேன் வாருள்? இவள் இரண்டாவது பொடிச்சி!"

"இதென்ன சொம்றன்ற மகளின் கலியாணத்துக்கு வருகிற போல வந்திருக்கிருள்...?"

"ஓமனை அவளின்ரை சோடினை! சாச்சாய்...!"

"இஞ்சை... அவர் வேலையாலை வந்திடுவார்! சவம் எடுக்கிற வழியாய்க் காணவில்லை! மட்டக்களப்பாலை மோன் வந்த பிறகு எடுப்பினமாக்கும்?..."

பாட்டுக் காரர்கள் முழக்கித் தள்ளினார்கள்:


'மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை...!'

இவற்றையெல்லாம் கவனியாது, நீள்துயிலில் கால்களை நீட்டிக் கரங்களை நெஞ்சின் மேல் வைத்தபடி, கிழவன் விறைத்துக் கிடந்தான்; அவனை ஒரு வெள்ளை வேட்டியால் மூடியிருந்தார்கள். வேட்டியிலிருந்த ஒரு கிழிசலினூடாகக் கால் பெருவிரல் வெளியே தெரிந்தது.

"சரி, சரி இனிக் குளிப்பாட்டுங்கோ...!" யாரோ கட்டளையிட்டார்கள்; அதையடுத்துப் பிணத்தை நோக்கிச் சிலர் நகர்ந்தனர்.

"ஐயோ! . என்ரை ராசா...! இனி எப்ப காணப் போறன்?" கிழவி பெருங் குரலிற் கதறினாள்.

"கொஞ்ச நேரம் பார்ப்பம்! யாழ்தேவி வர இன்னும் பத்து நிமிசம் இருக்கு!... மட்டக்களப்பிலிருந்து மோன் வந்திடுவான்! பிறகு சரியில்லை...கடைசி, தேப்பன்ரை சவத்திலாவது முழிக்கட்டும்...!"



"முதல்லே குளிப்பாட்டுங்கோ!... எல்லாம் சரி...!"

தம்பு மாஸ்ரர் இவற்றையெல்லாம் பார்த்தும், கேட்டும் கொண்டிருந்தார்; 'கிழவன் பாக்கியசாலி! நல்ல சாத்தான். இருந்தாப் போலை சரி! கிழவி எவ்வளவு கதறுகிருள்? கிழவன்ரை பிள்ளையள் எல்லாந் தங்கப் பவுண் தான்! கிழவனுக்காக உள்ளமுருகி அழுவதற்கு எவ்வளவு பேர்? நோய் நொடியென்று, அப்புகாத்து விட்டு ஆறுமுகத்தைப் போல வருஷக் கணக்கில் பாயிலே கிடந்து அழுந்தாமல் போட்டான்! கிழவன் புண்ணியம் செய்தவன்!...' என்று எண்ணிக்கொண்டார்.

குளிப்பாட்டிக் கொண்டு வந்து, சவப் பெட்டிக்குள் வைத்து வாங்கிலை வைத்தார்[illegible] விபூதி நெற்றியில் பளிச்சிட்டது; சந்தனப் பொட்டு அதன் மேல் விளங்கியது. யாரோ ஒரு கிழவி வெற்றிலையை இடித்துக்கொண்டு வந்து பிணத்தின் வாய்க்குள் செருக்கினாள்; மிகுதியைச் சவப்பெட்டியின் ஒரு மூலைக்குள் வைத்தாள்.

சுற்றிவரக் கற்பூரம் கொழுத்தினார்கள். தலைமாட்டில் குத்துவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. இவ் வொளி வெள்ளத்தில் சவப் பெட்டி மினுங்கியது.

கிழவன் அமைதியாகக் கிடந்தான்.

"தாலிக்கொடியைக் கழட்டிக் கிழவனுக்கு மேலே, நெஞ்சிலை வையுங்கள்!..." ஐயர் கூறினார்.

கிழவி தாலிக்கொடியைக் கழற்றினாள். அவளுடல் கரம் எல்லாம் நடுங்கின; தாலிக் கொடி கண்ணீரால் தோய்ந்தது.

"ஐயோ... என்ரை ராசா...!"

"ஐயோ...என்ரை......"

"ஐயோ...!"—கிழவி வீரிட்டுக் கத்தினாள்.

மூத்த மகன் கண்ணமிடித்தான்; இருச்சுண்ணப்பதிகம் வாயில் வந்தபடி இராகமிழந்துப் பாடப்பட்டது; பாடகர்கள் சுய நிலையில் இருந்தால் தானே? சுண்ணமிடித்து முடிந்து விட்டது. இடித்த சுண்ணத்தைத் தகப்பனின் இரு கண்களின் மேலும் மூத்த மகன் அப்பினான்.

வாசலில் கார் ஒன்று வந்து நிற்கும் சப்தம்.

"ஐயோ........ என்ரை ஐயா......!" ஒரு பெண்ணின் குரல் எழுந்தது; தம்பு மாஸ்ரர் திரும்பிப் பார்த்தார். ஒரு பெண் ஓடி வந்தாள்.

"என்ரை ஐயா!......"

அவள் பின்னல் ஆடவன் ஒருவன், இரு குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்தான்; கிழவனின் மகள் வந்து விட்டாள்.

மகளைக் கண்டதும், கிழவியின் துயரம் கூடிவிட்டது. தாயும், மகளும் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறினார்கள்.

குழந்தைகள் கண்களைக் கசக்கின.

'கிழவன் பாக்கியசாலி! பேரக்குழந்தைகள் கூடக் கிழவனுக்காகக் கண்ணீர் சிந்துகின்றன.........!' தம்பு மாஸ்ரர் எண்ணிக் கொண்டார்.

எல்லாம் முடிந்து விட்டன; மாரடிப்புக் கூட முடிந்து விட்டது; பெட்டியை மூடிக் கட்டினார்கள்; கிழவி வீரிட்டுக் கதறுகதறென்று கதறினாள்; பாடையைத் தூக்கினார்கள்; மூத்த மகன் கொள்ளிக் குடத்தைத் தூக்கிக் கொண்டான். பறை மேளங்கள் முழங்கின முன் செல்லப்பாடை புறப்பட்டது.

தம்பு மாஸ்ரர் சூழ்நிலையைத் திரும்பவும் கண்ணோட்டம் விட்டார்; 'தலையிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு, 'என்ரை ராசா' என்றலறும் கிழவி; கொள்ளிக் குடத்துடன் விழிகளை நீர்த்திரையிட நடக்கும் மூத்த மகன்; மாமரத்தோடு நின்று அழும் இரண்டாம் மகன்; சுவரோடு விறைத்து நிற்கும் கடைசி மகன்; 'ஐயோ, ஐயா.........' என்று கதறும் மகள்; கண்ணீர் விடும் பேரக் குழந்தைகள்!'

கிழவனுக்காக அழுகிறார்கள்.

'கிழவன் பாக்கியசாலி...!'

தம்பு மாஸ்ரர் ஊர்வலத்தைத் தொடர்ந்தார்; ரோட்டில் ஊர்வலம் ஏறிவிட்டது. அப்போது—

இரண்டு போலீஸ்காரர் கூட, அவ்வூர் விதானையார் சைக்கிளில் வந்திறங்கினர்;

"பாடையை வீட்டிற்குத் திருப்ப வேண்டும்! இயற்கையான சாவில்லை இது. என்று சேதி கிடைத்திருக்கிறது! பரிசோதித்தபின் தான் கடலைக்குக் கொண்டு போகலாம்!......"

எல்லோரும் திகைத்துப் போய் நின்றார்கள்.

யாரோ ஒருவர் விதானையாரைத் தனிமையில் அழைத்துச் சென்றார்.

சற்று நேரம் ஓடி மறைந்தது.

விதானையாரும், பொலிஸ்காரர்களும் திரும்பி விட்டார்கள்; ஊர்வலம் மயானத்தை நோக்கி நடந்தது; தம்பு மாஸ்ரர் கிழவனின் பிணம் எரியுறுவதைப் பார்த்து, "என்ன இருந்தாலும் நீ பாக்கியசாலி!......" என்று கூறிவிட்டுத் திரும்பினார்.

அவர் வீட்டுக்கு வரும்போது மாலையாகிவிட்டது; தோய்வதற்காக நேரே கிணற்றடிக்குச் சென்றார்.

"டேய்... டேய்... இரடா; செத்த வீட்டிற்குப் போட்டு வந்து கிணத்திலை அள்ளப் போறியே?"

தம்பு மாஸ்ரரின் தாய்க் கிழவி ஓடி வந்தாள்

கிழவி நீரள்ளி அவரின் தலையில் ஊற்றினாள்.

"அம்மா! இப்ப செத்த கிழவன நல்ல பாக்கிய சாலி......! என்ன.........?"

"ஓமடா! பாக்கியம் செய்தவன் தான்! ஆனா வயக்கிலே பசியாற எப்ப அவன் சாப்பிட்டிருப்பான்? அவள் மாய்மாலக்காரியும்,

(11-ம் பக்கம் பார்க்க)

கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம்
நீடிய உழைப்பு
இவைகளுக்கு
ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND
டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்,
14, டாம் வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிங்களம் படிக்க மாட்டோம்'

## விடுதலைக்கு காணிக்கை எங்கே?

[விடுதலைப் பாதையில் ஏறு நடைபோடும் இளவல்களுக்கு என்னென்ன பரிசுகள் கிடைக்கும், எத்தகைய கஷ்டங்கள் நேரிடும் என்பதனை அறிஞர் அண்ணா "திராவிட நாட்"டில் விளக்கியுள்ளார். இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தின் விடுதலைக்காக இலட்சிய கீதம் பாடும் இளைஞர்களுக்கு இது ஏற்றதொரு கருத்தாகும்.]

நாடு கடத்தினார்கள். நையப்புடைத்தார்கள். பத்தாண்டு சிறைத் தண்டனை, சுட்டுக்கொல்ல உத்தரவு, என்பன போன்றவைகள் நம்மை அடக்க அச்சத்தால் பிடிக்கப்பட்ட ஆட்சி மேற்கொண்டு தீர வேண்டிய முறைகளாகும்.

நறுக்கி எடுத்து, கொதிக்கும் நீரில் வேகவைத்து, சுவை கூட்டியான பிறகே பச்சைக் காய்கறி பண்டமாகிறது. உண்டு மகிழ மரண வாயிலில் போய்ப் போய் வந்த பிறகே தாய் பிள்ளைப் பேறு காண்கிறாள். கீழ் மண் மேலாக உழுது கிளறிய பிறகே, போட்டது முளைக்கிறது. கடைந்தால் தான் மோரிலிருந்து வெண்ணெய் கிடைக்கிறது. விடுதலை மட்டும் என்ன, வாய்ப் பந்தலிட்டு வார்த்தைக் கொடியேறச் செய்து, பறித்தெடுத்திடும் காயோ! இல்லை தம்பி இல்லை!

நாடுவிடுபட நானிலமதனில் கொட்டப்பட்ட இரத்த வெள்ளம் எனலாம். கொய்தனர் தலையினை! கொளுத்தினர் உயிருடன்! இடித்தனர் மனைகளை! ஒடித்தனர் கரங்களை பறித்தனர் கண்களை! —என்றெல்லாம் படிக்கிறோம்—நாடுமீட்டிட வீரர் நடாத்திய கிளர்ச்சிக் காதைகளில்!

தம்பி, வரலாற்று ஏடுகளைக் கூட பிறகு பார்த்திடுவோம், கொடி காத்த குமரன் அடிபட்டு மாண்டது அறியாயோ? செக்கிழுத்த சிதம்பரனார் வேற்று நாடோ? இவைதமை அறிந்துள்ள நாம் உள்ளத் தூய்மையுடன் ஏற்றுக்கொண்டுள்ள ஒரு இலட்சியத்துக்காக எப்போது காணிக்கை செலுத்துவது? எங்விதமான காணிக்கை?

விடுதலை அதனைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

அறிஞர் அண்ணா

## துன்பம், துயரம் எது நேர்ந்தாலும் தீர்மானத்தை செயல்படுத்துவோம்

### அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் முடிவு

நம்மை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளுக்கு முடிவு காணும் வரை எத்தகைய சக்தி கொண்டு எம்மை நச்சரித்தாலும், பதவி உயர்வு, பண உயர்வு முதலியவற்றைக் காட்டினாலும் நாம் சிங்களம் கற்கப் போவதில்லை. இதுவே இப்போதுள்ள சூழ்நிலையில் நமது முதற்பணி. இத் தீர்மானத்தை நிலை நாட்டுவதில் எத்தகைய துன்பம் நேரிடினும் பொருட்படுத்தலாகாது.

இவ்வாறு கொழும்பு நாவலர் கழக மண்டபத்தில் நடைபெற்ற அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் முதலாண்டுக் கூட்டத்தின் போது தலைமை வகித்த சங்கத் தலைவர் திரு கே. கனகசபை முதலி தெரிவித்தார்.

கூட்ட ஆரம்பத்தில் மறைந்த பிரதம தபால் அதிகாரி (போஸ்ட் மஸ்டர் ஜெனரல்) திரு. த. சிவப்பிரகாசம் அவர்கட்கு அஞ்சலி செலுத்து முகமாக இரண்டு நிமிட மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

திரு. கனகசபை முதலி தமது தலைமை உரையில் தொடர்ந்து கூறியதாவது.

அரசகரும மொழிக்கொள்கையின் ஒருதலைப் பட்சமான திட்டங்களினல் தமிழ் அரசாங்க ஊழியர்களின் உரிமைகளும், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையும் அழிந்து வருகின்றன. ஆட்சியாளரின் செயல் பெரும்பான்மையினரை திருப்திப் படுத்தும் நோக்கத்துடன் செய்யப்படும் செயலன்றி வேறென்ன? இந்த அவல நிலையை எப்படிச் சமாளிப்பது என்பதே எங்களுக்கு எழுந்துள்ள பிரச்சினையாகும்.

எங்கள் சிங்கள சகோதரர்களுடன் யாம் ஒற்றுமையுடன் கடந்த காலத்தில் போராடி இறுதியில் எந்த வித பலனும் காணுது எமக்கென இந்த அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தை கடந்த ஆண்டு நிறுவினேம். இன்று ஓராண்டு நிறைவில் எங்களுக்குள் மிகுந்த ஒற்றுமையுடனும் புரிப்புடனும் செயல்படுவோம் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றோம்.

எமது எதிர்காலம் எந்த வகையிலும் எமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடியதாக இல்லை எமக்குள் ஆர்வம் மெள்ள மெள்ள வரலாம், தவறில்லை, வேகம் குறைவாக இருக்கலாம் தவறில்லை, தயக்கம் இருக்கலாம் தவறில்லை ஆனல் ஒற்றுமையும் தொண்டாற்றும் திறமையும் நீடித்திருக்க வேண்டும். நாம் எடுத்த கருமம் நிறைவேறும் வரை பொறுப்புணர்ச்சி இருக்க வேண்டும். விட்டு விளக்குப்போல் நிதானமாக, சீராக ஒளிவிட்டு செயல்புரிய வேண்டும்.

எம்மை எதிர் நோக்கியிருக்கும் பிரச்சினையை தீர்வு காணும் வகையில் முதல் வேலையாகநாம் செய்ய வேண்டியது, அனைவரும் ஒருமுகமாக சிங்களம் கற்காமல் இருப்பதே. இதை செயல் படுத்துவதில் நாங்கள் எந்த வித தயக்கமும், மயக்கமும் கொள்ளாதிருத்தல் வேண்டும். இதனல் ஏற்படும் கஷ்டங்கள் அனைத்தும், நாம் நமது வருங்கால சந்ததியினரை தன்மானத்துடன் தலை நிமிர்ந்து வாழவகை செய்வதற்காகவே என்ற மனநிறைவு வேண்டும்.

கூட்டத்திற்கு பெருந்திரளான அங்கத்தவர்கள் சமுக மளித்தனர்.

கீழ்கண்டவர்கள் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வே. கனகசபை முதலி, உபதலைவர்: ஏ. புண்ணியமூர்த்தி, செயலாளர்: இம்மானுவேல் அந்தோனிப்பிள்ளை, துணைச் செயலாளர்: ச. அ. செபரெத்தினம், பொருளாளர்: தம்பிப்பிள்ளை துரைராசா, துணைப் பொருளாளர்: பொ. கனகலிங்கம்.

செயற்குழு உறுப்பினர்கள்: தருமலிங்கம், சோமசுந்தரம், செ. அருச்சுணு, சு. இரத்தினம், வ. நடராசா, க. குமாரதாசன், சோ முருகையா, சா. பாலசுப்பிரமணியம், க. விசுவலிங்கம், மு. சி. நடராசா, க. பாலசுப்பிரமணியம்.

## தொழிற்சங்கம் பலப்பட்டால் தொழிலாளர் முன்னேறலாம்

### தோட்டக் கூட்டத்தில் பழனிச்சாமி

தொழிலாளர் முன்னேற்றம் காணவேண்டுமானல், தொழிற் சங்கத்தை பலப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் தொழிலாளர் வாழ்க்கை முன்னேற முடியாது.

இவ்வாறு சமீபத்தில் மலாயாசென்று இலங்கை திரும்பிய களனிவேலி மாவட்ட தலைவர் திரு. பி. பழனிசாமி பிள்ளை எட்டியாந்தொட்டை இ. தொ. காங்கிரஸ் காரியாலயத்தில் நடைபெற்ற தோட்டக் கமிட்டிக் கூட்டத்தில் கூறினர்.

அவர் மேலும் தொடர்ந்து கூறியதாவது:— சமீபத்தில் நான் சென்றிருந்த மலாயா நாட்டில் சுமார் 70 லட்சம் மக்கள் வசிக்கின்றார்கள். அதில் அதிகமானவர்கள் சீனர்கள். சில பெண்கள் ரப்பர் தோட்டங்களில் பால் வெட்டும் தொழிலாளர்களாக தொழில் செய்து வருகிறார்கள். காலை 7 மணிக்கெல்லாம் வேலைக்கு சைக்கிளில் புறப்படுகிறார்கள். வெட்டி எடுக்கப்பட்டிருக்கும் பாலை ஒரு 'வான்' சேகரித்துக்கொண்டு வருகிறது. அதில் இவர்கள் பாலை ஊற்றிவிட்டு சைக்கிளில் திரும்புகின்றனர்.

நம்நாட்டு தொழிலாளர்களைவிட அவர்கள் பன்மடங்கு ஆரோக்கிய மிக்கவர்களாய் தென்படுகின்றனர். பால்வெட்டுதலிற மற்றவை கணக்கு வேலைகளாகக் கொடுக்கப்படுகின்றன. கருங்கல் கூறின் சகல வேலைகளையும் அவர்கள் சுமார் 6 மணி நேரத்திற்குள் முடித்துவிட்டுவீடு திரும்புகின்றனர். இலங்கை தொழிலாளர்களைவிட ஓரளவு குறைவான நேரம் வேலைசெய்த போதிலும் சம்பளத்தை எடுத்துக் கொள்ளும்போது நம்நாட்டைவிட அதிக சம்பளம் பெறுகிறார்கள்.

மலாய் நாட்டு தலைநகராகிய கோலாலம்பூரில் தேசிய தோட்டத் தொழிலாளர் யூனியன் என்ற பெயரில் செயல்படும் அந்நாட்டு தொழிற் சங்கத்தின் தலைமைக் காரியாலயம் இருக்கிறது. அச்சங்கத்தை நிர்வகிப்பவர்களுக்கு தனித் தனி பெரிய அறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் அதில் அங்கம்வகிக்கின்றனர். ஒவ்வொரு தொழிலாளியும் மாதமொன்றுக்கு ஒரு டாலர் சந்தா செலுத்துகின்றனர்.

முதலாளியும் தொழிலாளியும் சம அந்தஸ்துடன் பழகுகின்றனர். உதாரணமாக, 'அட்லான்ஸ்' வாங்கவந்த ஒரு தொழிலாளி முதலாளியின் பங்களாவில் அவருக்கு அருகாமையிலுள்ள ஒரு சோபாவில் அமர்ந்து பணம் பெறுவதை என்கண்களாலேயே கண்டேன். அப்போது நம்நாட்டு தொழிலாளரின் நிலை என்மனக்கண் முன் தோன்றிற்று.

மலாயா சுற்றுப் பிரயாணத்தின் போது, சிவாஜி கணேசனை அங்கே கண்டு, அமெரிக்கத் தொழிலாளர் நிலை பற்றியும் ஆராய்ந்தோராம்.

### சாதி ஒழிப்பு ஆலோசனை அரங்கு

யாழ்ப்பாணத்தில் வேரூன்றி விஷமங்களையும், பேதங்களையும் வளர்த்துவரும் ஜாதிக் கொடுமையை ஒழித்துக்கட்ட, யாழ். மேயர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் தலைமையில் ஓர் ஆலோசனை அரங்கு நிறுவப்படுகிறது. இந்த அரங்கின் முதல் கூட்டம் 6-7-62ல் நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது. சாதி ஒழிப்பு இயக்கத்தின் செயலாளராக திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை செயல் புரிகிறார் என்று அறியப்படுகிறது.

### கிழவன்...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளும் கிழவனுக்கு எங்கை நல்ல சாப்பாடு பரிமாறக் கொடுத்தவர்கள்? உழைக்கு மட்டும் நல்லாச் சாப்பிட்டுவிட்டு, உழைக்கேலாமைப் போனதும் நாய்க்கும் கேவலமாய் மதித்தால்......? மல்லர் போல மூன்று ஆம்பிளைகளைப் பெத்தும் கிழவன் என்னத்தைக் கண்டான்? மதிப்பற்ற பேச்சைத்தான்!...... அதுதானே கிழவன் மருந்து குடிச்சுச் செத்தவன்!......... செத்த பிறகு மாய்மாலம் போடுகினம்......"

தம்பு மாஸ்டரின் தலையில் அச்சுலக்கை முறிந்து, துளாய் பிரண்டது போல விருந்தது; அவர் தன்னையே கேட்டுக் கொண்டார்; "கிழவன் பாக்கியசாலி?......"

விடை கிடைத்தது;

"பாக்கியசாலிதான்!"

[illegible]

விடை கொண்டு அழிந்தது.

### சுதந்திரன் சந்தா விபரம்

இலங்கை—இந்தியா உட்பட

**வருடச் சந்தா ரூபா. 10-00**

இன்றே உங்கள் சந்தாப் பணத்தை அனுப்பி சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் கலைப் பகுதி

# ஆடல்பாடல்காட்சி

## புதுமை டைரக்டர் பாலச்சந்தர்

நடிகர்களுக்குள், தயாரிப்பாளர்களுக்கும், டைரக்டர்களுக்கும் தொல்லை கொடுக்கும் பலர் இருக்கிறார்கள். ஒரு படத்தில் கதாநாயகன் வேடம் போட்டுவிட்டால் போதும், அவர்களைப் பிடிக்க முடியாது. தற்கால சினிமா டைரக்டர்களுள் ஓரளவு மதிப்புடன் விளங்குபவர் டைரக்டர் எஸ். பாலச்சந்தர் என்று கூறலாம்.

காலை ஏழு மணியிலிருந்து மத்தியானம் ஒரு மணிவரை யும் படப்பிடிப்பு என்றிருந்தால், பாலச்சந்தர் பொறுப் பேற்றுள்ள படத்தின் முதல் காட்சி சரியாக ஏழு மணிக்கே படமாக்க ஆரம்பிக்கப்படவேண்டும். ஏதாவது கடங்கள் ஏற்பட்டால், காரணமாயிருப்பவர் எவரோ, அவர் கண்டிப்பாக மிக வேதனைப்பட வேண்டியிருக்கும். கண்டிப்பும், கருணும் பொருந்திய இந்த டைரக்டரை ஒவ்வொரு மணிக் கர்வம் பிடித்தவர் என்று கூறுகின்றனர்.

ஒரு குளிகையை மையமாக வைத்துக் கொண்டு 'ஒடாதே நில்' என்ற ஒரு கதையை உருவாக்கி டைரக்ட் பண்ணியும் வந்தார். இப்படத்தில் எல்லோரையும் புதுமுகங்களாகவே புகுத்தியிருந்தார். இப்படத்தில் விசேட அம்சம் என்னவென்றால், நடிகர்கள் எல்லோரும் முக அலங் காரம் எதுவுமின்றிச் சாதாரணமாகக் காட்சி அளிக்கின்றனர். தயாரிப்பாளர்—டைரக்டர் வடாய் காரணமாகபடம்பல ஆண்டுகளாக வளர்ச்சி குன்றி, டப்பாவிற்குள் நுழைந்து கிடக்கின்றது.

பாலச்சந்தர் தனது படங்களில் — புதுமுகங்களைப் புகுத்துவதன் நோக்கம் என்னவென்றால், மற்றைய நடிகர்களைக் கட்டிநது வேலை வாங்க முடியாது. புதியவர்களை அவ்வியமேற்பட்டால் அதைத் தொடுத்தாவது திருத்திவிடலாமல்லவா?

### அவனு இவன்

பாலச்சந்தர் புதுமையான தொரு சித்திரத்தை 'அவனு இவன்' என்ற பெயரில் தயாரித்து வருகிறார்கள். இப்படத்தில் வசந்தி கதாநாயகியாகத் தோன்றுகிறார். புதுமுகம் ரமேஷ் கதாநாயகனாகத் தோன்றுகின்றார்.

வீணை வாசிப்பதில் பாலச்சந்தர் நிகரற்ற நிபுணர். வீணைக்கும் இப்படத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீதர் "நெஞ்சில் ஓர் ஆலயம்" படத்தைத் தயாரித்து திரைக்கு அனுப்பி விட்டாரல்லவா? அதே ரீதியில் இப்படத்தையும் சீக்கிரமாகத் திரைக்கு அனுப்பி விட பாலச்சந்தர் முயலுகிறார்.

பாலச்சந்தர் முக்கியமான ஆங்கிலப் படங்களைத் தவற விடுவதில்லை. படம் பார்க்கும் போதும் கையில் ஒரு "பைல்" வைத்துக் கொள்வார். முக்கியமான கருத்துக்களுள்ள கட்டங்களைப் பார்க்கும் போது அக்கருத்துக்களையிட்டுக் குறிப்புக்களை எழுதி விடுவார்.

பாலச்சந்தரின் படைப்புக்களில் புதுமை மிளிருவதைக் காணலாம். ஜனரஞ்சகமாக அமையாவிட்டாலும், கருத்துச் செறிவும் புதுமைகளும் படங்களில் நிச்சயமாக அமைந்துவிடும்.

அமெரிக்காவிற்குச் சென்று ஹொலிவூட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து வர பாலச்சந்தர் விரைவில் செல்கிறார்.

## தொழிலாளர்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுடைய துன்பங்களையும், துயரங்களையும், சர்வதேச தொழிலாளர் மாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகள் மத்தியில் எடுத்துக் கூறி, வாழ்விழந்து வகையற்றுத் திண்டாடும் மக்களுக்குப் பரிகாரம் தேட முயற்சியாமல், அரசாங்கத்திற்கு வாழ்த்துப் பாடிவிட்டு வந்துள்ளார்.

தான் பிரதிநிதித்துவம் வகிக்கும் இயக்கத்தின் உறுப்பினர்கள்— இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும்— பெருவாழ்வுக்கும் வழிவகுத்த தோட்டத் தொழிலாளர்கள், இன்று அரசாங்கச் சட்டங்களினுல் அனுபவித்து வரும் இன்னல்கள், இனிமேலும் வரவிருக்கும் சட்டங்களால் பன்மடங்கு அதிகரிக்கப்போகின்றன. அரசாங்கம், தன் இனமக்களுக்கு இழைக்கும் அநீதிகளை திரு. இராமாநுஜம் மூடி மறைத்தது என்ன நியாயமோ?

ஏழைத் தொழிலாளர்களிடம் வசூலித்து எடுக்கும் சந்தாப்பணத்தில் வெளிநாடுகளுக்குச் சென்று வேடிக்கை விநோதங்களில் ஈடுபடுவது கெட்டுப் போகும் என்ற பயமா? அல்லது அரசாங்கம் சொத்துக்களை பறித்து விடுமே, என்ற அச்சமா?

தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக வெளிநாடு செல்லுபவர்கள், தாங்கள் சார்ந்த இயக்கத்தின் உறுப்பினர்கள் அனுபவிக்கும் கஷ்டங்களைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் தங்கள் பேச்சுக்களை அமைத்துக் கொள்ள வேண்டும். இதை விட்டுவிட்டு ஆளும் கட்சிக்கும், தங்கள் எஜமானர்களுக்கும் வாழ்த்துக்கூறி "நல்ல பிள்ளைகள்" என்ற பெயரைத் தட்டிக் கொண்டு வர முயற்சிப்பது வெறுக்கத் தக்கதாகும்.



இளமையும் அழகும் மிளிர மனம் மயங்கி மாலை கடர்விடும் 'தாகம்போல' கூடக் கோடி சரோஜா நாணி நகையில் விகசிக்குள்.

## யாழ்ப்பாணத் தமிழ் பேசும் விக்ரமாதித்தன்!

கடந்த ஆறு வருடங்களாக ஸ்டுடியோவில் முடங்கிக் கிடந்த விக்கிரமாதித்தன் விரைவில் வெளியே தலை நீட்டப் போகிறான். விக்கிரமாதித்தனை புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் நடித்துள்ளார். பத்மினி, ராகினி முதலியோருடன், கலைவாணர் என். எஸ். கே., மதுரம் ஆகியோரும் இப்படத்தில் நடித்துள்ளனர். ஜெய் பாரத் புரடக்ஷன்சாருக்காகத் தயாரிக்கப்பட்ட இப்படத்துக்கு 'என் தங்கை' நடராஜன் கதை வசனம் எழுதியுள்ளார்.

புரட்சி நடிகருக்கு, தொடர்ந்து ஒரே வீச்சில் பேசக் கூடிய வசனம் ஒன்று இப் படத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஏழு நிமிடங்கள் வரை இவ் வசனம் நீடிக்கும். உலகத்தின் பல மொழிகள் இவ் வசனத்தில் இடம் பெறுகின்றன. இலங்கை யாழ்ப்பாணப் பகுதித் தமிழ்,சிங்களம் முதலியனவும் இடம் பெற்றுள்ளன. ஒரே தடவையில் இக் கட்டம் தொடர்ச்சியாக, படமாக்கப்பட்டுள்ளது.

---

## தோழன்

ஏறத்தாழ விக்கிரமாதித்தன் வயதில் ஸ்டுடியோக்களில் முடங்கிக் கிடந்த "தோழன்" படமும் இம் மாத இறுதியில் திரைக்கு வருவுள்ளது. இப்படத்தில் மனோகர், மாதுரிதேவி, அஞ்சலிதேவி, என். எஸ். கிருஷ்ணன், மதுரம் ஆகியோர் தோன்றுகின்றனர்.



அமெரிக்கத் தெரு ஒன்றின் அழகினை நண்பர் ஒருவருடன் சேர்ந்து நடந்து பருகுகின்றார் செமாழி கணேசன்.

## சரோஜாதேவிக்கு கல்யாணம்?

**கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவியைக் கவர்ந்து செல்ல கன்னடத்து ராஜா ஒருவர் வருகிறார். சரோஜாதேவிக்கு விரைவில் திருமணம் நடைபெற்று விடுமென்பதான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. இன்னும் 3 வருடம் கழித்துத்தான் திருமணம் என்று தாயார் நிபந்தனை விதித்துள்ளார்.**

சரோஜாதேவியைப் பெண் கேட்க வந்தார்கள். கன்னடத்திலிருந்து சரோஜாதேவியின் அக்கா கணவரும் சில உறவினரும் சென்னைக்கு, சரோஜாதேவி வீட்டுக்கு வந்தார்கள். மைசூர் ராஜ்யத்தின் சட்டசபை உறுப்பினரான ஒருவருக்குத்தான் சரோஜாதேவியைப் பெண் கேட்டுள்ளார்கள்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் தனது அக்காளுக்கு சரோஜாதேவி வெகு விமரிசையாக சென்னையில் திருமணம் செய்துவைத்தார். சினிமா உலகப் பிரமுகர்களும் இந்தக் கல்யாணத்துக்கு விஜயம் செய்து சிறப்பித்தனர்.

சரோஜாதேவியின் அக்காவின் கணவருக்கு ஒரு தம்பியிருக்கிறார் அவர் ஒரு எம். ஏ. அவர் கல்லூரி மாணவராக இருந்தபோது சென்னைக்கு, தனது அண்ணனின் திருமணத்துக்கு, வந்திருந்தார். அப்போதே சரோஜாதேவியை அவருடன் சோடி சேர்க்க முஸ்தீபுகள் நடந்தன. ஆனால் அம்முயற்சி எதுவும் ஒப்பேறவில்லை.

இப்பொழுது மீண்டும் கல்யாணப் பேச்சுகள் நடைபெறுகின்றன. கன்னடத்திலிருந்து உறவு முறைச் சாதிரேல்லாரும் வந்தார்கள். கல்யாணப் பேச்சுகள் எழுந்ததும், இன்னும் மூன்று வருடங்களின் பின்னர்தான் கல்யாணம் என்று சரோஜாதேவியின் தாயார் நிபந்தனை விதித்து விட்டார்.

இதுபற்றி சரோஜாதேவி தனது கருத்தை வெளியிட விரும்பவில்லை எனினும், மாப்பிளை என்னமோ மனதுக்குப் பிடித்துள்ளவராகத்தான் தெரிகிறது.

குமுதம்

போட்டி

முடிவுகள்

15-7-62-ல்

வெளிவரும்



'பட்டி விக்கிரமாதித்த'வில்

என். டி. ராமராவ்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கப் பலகை

## ஈழத்து அறப்போரும் உரிமை மறுப்போரும்

1961ம் ஆண்டு நடந்த ஈழத் தமிழ் மக்களின், உலகப் புகழ் பெற்ற உரிமைப் போராட்ட நிகழ்ச்சிகள் புத்தக உருவில் வந்துள்ளன. கண்டால் எந்தத் தமிழ் பேசும் மகனும் உவகை கொள்வான். அன்றைய நிகழ்ச்சி இன்று சரித்திரம்— தமிழ் மக்களின் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கும் சத்தியாக்கிரக அறப் போர் நிகழ்ச்சிகள் சாதி, மதம், குலம், அரசியல் கட்சி என்ற பேதங்களை மறந்து தமிழ் மக்கள் ஒரு குரலாக சிங்கள எகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்திய 57 நாள் நேரடிப் போராட்டத்தைத் தத்ருபமாகச் சித்திரிக்கிறது இந்த தமிழ் நூல்.

முதலிலே அடிப்படைப் பிரச்னையை அலசி விளக்குகிறார் ஆசிரியர். அடுத்து சத்தியாக்கிரக நேரடிப் போராட்டத்திற்கான காரணங்கள்; பின் போராட்ட நிகழ்ச்சிகள்; கடைசியில் இதுவரை வெளிவராத ஏப்ரல் 17ம் திகதிக் கொடுரங்கள்— கொடுங்கோன்மையின் உச்சம், இராணுவத்தின் இராத்தாண்டவ, வெறியாட்டம்.

பல பத்திரிகைகளிலின்றும் சத்தியாக்கிரக நிகழ்ச்சி செய்திகளைத் தருவதன் மூலம் பாரபட்சமற்ற ஏடாக விளங்குகின்றது. இதனால் சில சில இடங்களில் தொடர்ச்சி அறுபடுகிறது. எனினும் அதிகமான நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. எழுத்தை மனதில் பதிய வைக்க பல புகைப்படங்கள்— அன்று நடந்தவற்றை நினைப்பூட்டுகின்றன. ஆனால் அச்சுப் பதிப்பித்தலின் குறைகள்,— மறுபதிப்பில் திருத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு தமிழுக்காகத் தம் உயிரையும் கொடுப்போமென முழங்கிய மாபெரும் நிகழ்ச்சி எப்போது புத்தக உருவில் வரும் என்று எத்தனையோ உள்ளங்கள் எதிர்பார்த்திருந்தன. அத்தனை மக்களும் களிப்புற "ஈழத்து அறப்போரும் உரிமை மறுப்போரும்" என்ற நூலை அவசர காலத்திற்கு அஞ்சாது தொகுத்து வெளியிட்டோர் உண்மையில் போற்றப்பட வேண்டியவர்களே. இருமலைப் படங்கள் இடம் பெறுமை போன்ற குறைகள் இருப்பினும் ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் வாங்கிப் படிக்க வேண்டிய புத்தகம்.

கிடைக்கும் இடம்:
கிறீன்லண்ட்ஸ் ஹோட்டல்,
கொழும்பு.

விலை ரூ. 2-00

—மதி—

# சந்திக்கு வந்தவை

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

அவர் கூறிய பொன்னுரைகளுள், தான் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளுக்குச் செல்லும்போது முஸ்லிமாக மாறி அவர்கள் நடை உடைகளைப்பின் பற்றுவதாகவும், கிறிஸ்தவர் மத்தியில் கிறிஸ்தவராக நடிப்பதும் சகஜம் என்று கூறியது தான் தலைசிறந்தது.

அன்னவித்துக்காகத் தன்னையே அடமானம் வைத்து, தன்மான உணர்ச்சியற்று, உத்தியோகம் நிலைக்க ஆட்சியாளருக்கு ஆலவட்டம் தூக்கும் இந்த அப்பாவி அதிகாரி, கல்லூரி அதிபர்களுக்குக் கூறும் புத்திமதி வேறு எப்படி இருக்க முடியும்?

வீட்டில் புத்தர் சிலை ஒன்றையும் வைத்து பூசை செய்து வருகிறார். ஆரிய சிங்கள உடையுடனும், வீட்டிலேயே சிங்கள உச்சரிப்புடனும் திரியும் இவ்வதிகாரி தனிப்பதவி நிலைபெறவே கோடமிடுகிறார் என்பதற்கு இன்னும் சான்று தேவையா?

பாம்பு தின்கிற ஊருக்குப் போனால் நடுத்துண்டு நமக்கு. இதுதான் அவரது தாரக மந்திரம்.

### கண்டி கல்வி இலாகாவில் மு. வாதியார்?

கண்டி கல்வி இலாகாவில் இனத் துரோக நடவடிக்கையில் இறங்கியுள்ள ஒரு மு. வாதியைப் பற்றி அம்மானுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

ஐயா மு. வாதியாரே!

உமது மு. இனம் தானு செஞ்சட்டை போட வைக்கிறது? உமது மு. கொள்கை ஒருபுறமிருந்தாலும் இனப்பாசமும் இல்லாமலா போய் விட்டது? ஏதோ உம் இன ஆசிரியர்களிடமாவது கொஞ்சம் கண்ணியமாக நடந்து கொள்ளும். அல்லா விட்டால் சந்தியில் நிற்க வேண்டிவரும்.

(மு—முற்போக்கு)—
இப்படிக்கு,
அம்மான்.

### "பச்சோந்தி வினைஞர்"

அண்மையில் கூடிய தமிழ் எழுதுவினைஞர் சங்க ஆண்டுக் கூட்டத்தில் "எந்த நிலையிலும் சிங்களம் படிப்பதில்லை" என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ள இதே வேளையில், சில பச்சோந்தி "வினைஞர்" களைப்பற்றியும் சில வார்த்தைகள் கூற வேண்டியிருக்கிறது.

தலைமை அஞ்சல் நிலையத்தில் ஒரு உதவிக் கணக்குப் பரிசோதகர் இருக்கிறார். தான் சிங்களப் பரீட்சைக்குத் தோற்றினால் தான் மேலதிகாரிகளிடம் நல்ல பெயரெடுக்கலாம் என்று எண்ணி ஏமாறுகிறார். தன்னுடன் ஒத்துழைக்கவும், தாளம் போடவும் ஆள் திரட்ட ஆரம்பித்தார். ஆனால் ஏமாந்தார். ஒன்று பட்டு நிற்கும் உத்தம ஊழியர்களை இவரால் அசைக்கவே முடியவில்லை. சிங்களம் படிக்க மறுக்கும் தமிழ் ஊழியர்களையும், தன் சதித் திட்டங்களுக்கு ஆதரவு தராதோரையும் நிதி மந்திரிக்கு காட்டிக் கொடுக்கப் போகிறேன் என்று கொக்கரித்து வருகிறார்.

அங்கே இன்னுமொரு அப்பாவி கூறுகிறார். "சிங்களம் படித்தால், தங்கள் ஊருக்கு உடனடியாகப் போக வேண்டிவராது. படிக்காவிட்டால் சீக்கிரம் பாய் கட்ட வேண்டியதுதான். எப்படியோ கடைசியில் எல்லோருக்கும் (தமிழ்பேசும் அரசாங்க ஊழியருக்கு) ஒரே பாதை தான்".

பெட்டி முடிஞ்சு போச்சுதுங்க
ஊருக்கு வாங்க
தம்பி ஊருக்குவா[illegible]
உடம்பை வளர்த்[illegible]
நிலந்தநெல் [illegible]
ஊருக்கு வாங்க.

# மாண்புமிக்க மீன்பிடித் தொழில்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்தனரோ அதைப் பின்பற்றினால் தாங்களும் அவர்களைப்போல் முன்னேற்றம் அடையலாம் என்ற எண்ணத்தினால் அவர்கள் பின்பற்றிய வழிகளைக் கடைப்பிடித்து அதன்படி முன்னேறியிருக்கலாம், அல்லது அவன் இலகுவாகத் தான் ஒரு வழியைக் கடைப்பிடித்து அதன்படி வெற்றி கண்டிருக்கலாம். அவை எப்படி இருப்பினும் குறைந்த பிரயாசத்துடன் அதிக லாபத்தைப் பெற்றுப் பொருளாதாரத்தை விருத்தி செய்யவே நாம் எல்லோரும் விரும்புவோம். இதை நாம் ஒருவரும் மறக்க மாட்டோம்.

### எமக்கென ஓர் இயக்கம்

எலவே நாம் எல்லோரும் கூட்டுறவாகச் சேர்ந்தால் இவ்வழிவகைகளை ஆராய்வது மிகச் சுலபமாக இருக்கும். நாம் பிறநாட்டு வல்லுனர்களை எமது அரசாங்கத்தின் மூலமாக அழைப்பித்து அவர்கள் பின்பற்றும் வழிவகைகளைக் கேட்டறியலாம். அவர்கள் கைக்கொள்ளும் பொருட்களை நாமும் கைக்கொள்ளலாம், பிறநாட்டவர்கள் எப்படித் தமது தொழிலை விருத்தி செய்கிறார்கள் என்பதை அவர்கள் நாட்டின் படக்காட்சிகள் மூலமாகவோ, செய்தித்தாள்கள் மூலமாகவோ கண்டறிந்து அதை எம்நாட்டு மக்களுக்கு ஒவ்வொரு இடமாகத் திரிந்து பிரச்சாரம் செய்ய இலகுவாக இருக்கும். இப்படிப் பல வழிகளில் எமது தொழிலை விருத்திசெய்வதற்கு ஏற்ற வழிவகைகளை நாம் ஆராய்ந்து அதன் மூலம் பலனை அடையவேண்டுமாயின் முக்கியமாக எங்களுக்கென ஓர் இயக்கம் அமைக்க வேண்டியது முக்கியம். அதில் நாம் எல்லோரும் அங்கத்தவராகச் சேர்ந்து எவ்வித பாகுபாடுமின்றி உழைக்கவேண்டும்.

இப்பொழுது எங்கள் ஈழத்திலே, சில சிறந்த இடங்கள் மீன் பிடிப்பதற்கு இருக்கின்றன என்று பரிசோதனைக்குப்பின் சில பிறநாட்டு வல்லுனர்கள் சிபார்சு செய்து சென்றிருக்கிறார்கள். அவ்விடங்களில் மன்னார், பருத்தித்துறை, திருமலை முதலியன சிறந்த இடங்கள், இவ்விடங்களில் மீன்பிடித் தொழிலைப் பெருமளவில் பெருந்தொகையிட்டுச் செய்தோமானால், நாம் வருடந்தோறும் கருவாடு, மீன் போன்றவைக்காகப் பிறநாடுகளுக்குக் கொடுக்கும் பணத்தை ஓரளவாவது மிச்சப்படுத்தலாம்.

இன்னும் நாம் ஓர் கூட்டுறவு இயக்கமாக இருந்தால் எமது கூட்டுறவு இயக்கத்தில் உள்ளவர்களில் சிலரை எமது இயக்கத்தின் மூலமா கவே பிறநாடுகளுக்கு அனுப்பி அவர்களை மீன் பிடித்தொழிலில் வல்லுனர்களாக்கி அவர்கள் மூலமாக எமது மீன்பிடித் தொழிலை நாம் நன்றாக விருத்தி செய்யலாம். அதிகமாக மீன்பிடிக்கும் இடங்களை அடுத்து வசிக்காதவர்கள் தங்கள் சிறிய தொகையைக் கொண்டு ஓரளவு பிரயாசையினாலும் தங்கள் வருவாய்க்கு ஏற்ற மீன்களைப் பிடிக்க வழிவகை செய்யலாம். அரசாங்கத்தை நம்பியிருக்கவேண்டிய நிலை அழிந்துவிடும். நாங்கள் பிடிக்கும் மீன்களை நியாயமான விலைக்கும் விற்கலாம். இதன் பயனாக நாம் நட்டம் என்கிற சொல்லையே தவிர்க்கக்கூடியவர்களாகுவோம்.

எமது தொழில்களுக்கு வேண்டிய வலை, தூண்டில், கயிறுவள்ளம் போன்ற துணைக்கருவிகளை நாம் இலகுவாக அடையலாம். இப்பொழுது மீன்பிடித்தொழில் அனேக இடங்களில் மிகச் சுலபமாக நடைபெறுகிறதை யாம் காண்கிறோம். சிலர் கட்டுமரங்களில் இயந்திரங்களைப் பூட்டி அதன் மூலமாக அதிக பிரயாசையையும் களைப்பையும் போக்குகிறார்கள். சிலர் இயந்திரங்கள் பூட்டப்பட்ட படகுகளின் உதவியால் தங்கள் தொழிலை நடாத்துகிறார்கள். இவ்வழிகளைப் பெரும்பாலும் பணமுள்ள ஒரு சிலரே கடைப்பிடிக்க முடிகிறது ஏழைகளால் இவை செய்யமுடியாது. எனவே தான் எங்கள் மீன்பிடித் தொழிலுக்கு உற்ற துணையாக அமைந்திருப்பது கூட்டுறவு என்பதை இங்கு வலியுறுத்துகிறேன்

நமது சமூகத்தினரிடையே பலர் சி. பா. த. பத்திரப் பரீட்சை சித்தியடைந்து விட்டு வேலையில்லாத் திண்டாட்டத்தில் தத்தளிப்பதை நாம் பார்க்கிறோம். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் எமது தொழிலை விருத்தி செய்வதற்கும், பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும் வாலிபர்களாகிய நாம் முன் வந்து எமது முதியவர்களையும் இவ்வழியில் ஊக்குவித்தால் நிச்சயமாக எமது தொழில் வளர்ச்சியடையும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

### நாயர் நினைவு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

படிப்பட்ட பலப்பல பள்ளிக்கூடங்கள், மன்றங்கள், மண்டபங்கள், படிப்பகங்கள், கலை கூடங்கள் முதலியன தேவை. அதன் முதற்படியாகவே இந்த சிறிய பள்ளிக் கூடத்தை அவர் பெயரால் எமது நண்பர்களின் உதவியுடன் ஆரம்பித்திருக்கிறோம். இங்குள்ளவர்களும் வெளியிலுள்ளவர்களும் நல்லெண்ணமும் உள்ளன்பும் காட்டினால் நிச்சயம் இச்சிறு பள்ளி விரைவில் ஒரு கல்லூரியாகக் காட்சியளிக்க முடியும்" என்று குறிப்பிட்டார்.

[illegible] "[illegible] நினைவுப் பள்ளி" துலக்க விழா இனிது முடிவுற்றது.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகளாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

சுதந்திரன் அச்சகம்.
தபால் பெட்டி 1183.
194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.
தந்தி : சுதந்திரன் போன் : 3411

சுதந்திரன் இல்லையேல் சுபீட்சமில்லை

## மாநாட்டு மலர் சிறுகதைப் போட்டி

சிறுகதை எழுத்தாளர்களுக்கு ஓர் மகிழ்ச்சி யூட்டும் செய்தி

தமிழரசுக் கட்சி வருடாந்த மாநாட்டின்போது வெளியாகும்

**'சுதந்திரன் மாநாட்டு மலரில்'**

பிரசுரிக்க சிறுகதைகள் தேவை. ஒரு சிறுகதைப் போட்டி மூலம் கதைகளைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்துள்ளோம்.

இலங்கை தமிழ் பேசும் மக்களின் இனவிடுதலைப் போராட்டங்களை மையமாக வைத்து கதைகள் உருவாக்கப்படல் வேண்டும்.

சிறுகதை ஆய்வுக் குழுவினரால் தெரிவு செய்யப்படும் முதல் இரண்டு கதைகளுக்கும் பரிசு வழங்கப்படும்.

**ரொக்கப் பரிசு ரூ. 150-00**
முதல் பரிசு: ரூ. 100-00
இரண்டாம் பரிசு: ரூ. 50-00

சிறுகதைகள், சுதந்திரன் பத்திரிகையில் ஒரே பக்கத்தில் பிரசுரிக்கப்படக்கூடிய அளவினதாய் இருத்தல் வேண்டும். வெள்ளைக் காகிதத்தில் ஒரே பக்கம் தெளிவாக எழுதப் பட்டிருத்தல் வேண்டும்.

பரிசு பெற முடியாத கதைகளில் பிரசுரிக்கத்தக்கவை, தகுதிக்கேற்ப அவ்வப்போது சுதந்திரனில் பிரசுரமாகலாம்.

**முடிவுத் தேதி : 31—7—1962**

31—7—62க்குப் பின்னர் வரும் சிறுகதைகள் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

போட்டிக்குரிய கதைகள் யாவும் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பப்படல் வேண்டும்:-

சிறுகதைப் போட்டி ஆய்வுக் குழு,
சுதந்திரன்,
தபால் பெட்டி 1183,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தங்கத் தாத்தாவின் கவிதை இன்பம்

க. ராணி நவமணி, மட்டக்குழி.

இன்பங்களில் ஒருவகை கவிதை இன்பம். கற்றோரையும் மற்றோரையும் இன்புறச் செய்வது கவிதை. பொருளை அறிய முடியாதவர் கூடக்கவிதை இன்பத்தை மாந்துவர். இந்த இன்பத்தை அனுபவிக்க நல்ல கவிதைகளை ஒரு முறைக்குப் பல முறைபடிக்க வேண்டும். எந்தக் கவிதையையும் அர்த்தம் புரியாமல் சுவைப்பது— இன்பம் பெறுவது என்பது இரு கண்களையும் இறுக மூடிக் கொண்டு வெளிச்சம் தெரிகிறது என்பது போலாகும்.

"தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும்" என்கின்ற கருத்துக்கள் நிறைந்த கவிதைகளைப் படித்துச் சுவைத்துப் படைத்துவிடக் கூடியவர்கள் புலவர்கள். அவர்கள் தமிழகத்தின் கண்களாக கலைப் பொக்கிஷங்களாக மதிக்கப்பட்டவர்கள். அவர்களுள் தங்கத் தாத்தாவும் ஒருவர். இவரின் இயற் பெயர் சோமசுந்தரப் புலவர். ஈழ மணித் திருநாட்டின் தவப் புதல்வர். தங்க மணை நவாலிக் கவிஞர். இவர் காலைக் கதிரவனின் தண்ணொளி வெண் முகத்திற்பட பொன்னிறமாகக் காணப்படுவார். ஏனெனில் மருந்துக்கும் கருமையே காணாத வெண்மை குளித்த தாடி, தலை மயிரைக் கொண்டவர், திருநீறு துலங்கும் நெற்றி; நிலவைப் பழிக்கும் சந்தனப் பொட்டு கண்ணூறு கழிக்கும் வெள்ளைக் கண்ணுடி, இதுவர் கட்டிகல்லாம் தாத்தா; அப்ப போடவல் பொரியுடன் தித்திக்கும் கவிதைகளும் தரும் புலவர் பெருமான் எமக் கெல்லாம் தங்கத் தாத்தா;

இவர் ஏராளமான கவிதைகளை நாட்டு மக்களுக்கு குறிப்பாக மாணவர்களாகிய நாம் படித்துப் பயன் பெறக் கூடியதாக நல்கிச் சென்றுள்ளார். அவரது கவிதைகள் பொருட் செறிவு நய இழைவு இன்பக் கலப்பு இவைகளால் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இன்னும் சிறப்பாக— சுருக்கமாகச் சொல்லப் போனால் அவரின் கவிதைகளை அவற்பாகு என்றே சொல்லலாம். ஒரு பிடி அவல் பார்க்கச் சாதாரணமாகத் தென்படலாம். ஆனால் அதை நாம் வாய் வலிக்கும் வரை சப்பினாலும் உருசி உச்சாணிக்கு வருமே யன்றி ஒருகாலும் குன்றுது— தெவிட்டாது. இதைப் இசைச் சிருஷ்டிக்கும் முறை இன்பகரமாக இருக்கும்.

"இன்னமுதோ தெவி
தேனே—என
எஞ்செவிக்கினிக்கின்ற மொழி
யெதுதானே?"

என்று கேட்கும் இடத்து நாம் அடையும் இன்பம் தான் எத்தனை!

ஆனால் தங்கத் தாத்தா அதில் கண்மூடி அறிவு அந்தகர்களாக பிற மொழிப் பித்துப் பிடித்தலைபவர்களுக்கு நல்ல சாட்டை கொடுத்து மெய்யுணர்வு கொள்ளச் செய்கிறார். அதோடு தன் மொழியின் சீரான பெருமையை எடுத்துக் கூறிப் புத்தெழுச்சி கொள்ளச் செய்கிறார். தாத்தாவின் கவிதை இன்பத்தை நுகரச் செந்தமிழ்த் தாய் என்னும் ஒரு கவிதைத் துளியே போதும். "கண்டவர் விண்டிலர்" தமிழ் மொழியை நன்கு சுவைத்துள்ளார். அதன் பெருமையை அடுத்தவருக்கு எடுத்துச் சொல்லத் துடிக்கின்றார். எப்படிச் சொல்வது, அதை வர்ணிக்க வார்த்தையின் சக்தி காணுதே. உதாரணமாக ஒருவர் "சீனி என்ன உருசி தம்பி" என்று கேட்கிறார் என வைத்துக் கொள்வோம். இனிப்பு என்று உடனே சொல்லி விடுவோம். இனிப்பு எப்படியப்பா இருக்கும் என்று கேட்டு விட்டால் சொல்லி விடுவோம் என்று துடித்த போதிலும், சொல்ல முடியாமல் விழிப்போம். நாமென்ன? எல்லோரும் அப்படித்தான். இப்படிப்பட்ட நிலையைத் தான் தாத்தா அழகாகச் சித்திரிக்கின்றார். தான் சுவைத்த சுவையை இன்னமுதோ தெவிதேனே என்று சாதுரியமாகச் சொல்லி விட்டார். அவை கவிதைகளாக உதிர்ந்தன. தாமே பழுத்துக் கனிந்து விழுந்த மாங்கனி; மதுரகனி; நுகரும் தோறும் இனிமை சொட்டும். எல்லோரும் அதே அடியை ஒரு முறைக்குப் பலமுறை அம்மியில் அடிமேல் அடி அடிப்பது போற் சொல்லிப் பாருங்கள் நம் அங்கமெல்லாம் அன்பு பரவும், உள்ள மெல்லாம் இன்பம் உருகும். உறுப்பெல்லாம் இனிக்கும். இதுவே

போன்று தான் தங்கத் தாத்தாவின் கவிதைகளிலும் ஒரு புத்தெழுச்சி உண்டாகி மெய்யுணர்வைத் தூண்டும்.

---

அன்புள்ள மருமக்களே!

வணக்கம். நீங்கள் எழுதியனுப்பும் கட்டுரைகளைச் சுருக்கமாக எழுதி அனுப்புங்கள். கவிதைகள் எழுதுவோர் தமது கவிதைகளில் நீண்ட வசனங்களை உபயோகிகாமல், சிறிய, சிறிய வசனங்களிற் கவிதைகள் புனைய வேண்டும்.

'சிந்தனைச் செல்வி' தமிழ்த் தாயின் மானம் காக்க மருமக்கள் அனைவரையும் அறைகூவி அழைக்கிறார். மேலும் நல்ல கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

கட்டுரை, கவிதைப் போட்டிகளும் வெகு விரைவில் இப் பகுதியில் இடம் பெறும். விபரங்கள் அடுத்த வார இதழில். அது வரை பொறுத்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

எல்லாவற்றையும் படித்து இன்புறுவீர்கள் என நம்பும்,

வளர்மதி மாமா

---

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

---

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 9

பெயர் ____________________

பாடசாலை ____________________

விலாசம் ____________________

____________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் ____________________ கையொப்பம் ____________________

---

## மலரே! மலரே! மலர்வாயே!

— நவாலியூர்க் கவிராயர் —

மலரே மலரே மலர்வாயே
மலர்ந்து மணமும தருவாயே
மயக்கும் வண்டின் மடியினிலே
மயங்கிக் கிடப்பதும் சரிதானே?

தேனின் தெவிட்டாச் சுவை கண்டு
தேடி வரும் வண்டினமே;
மாவின் மருட்சி விழி கண்டு
மயங்கி விழுமே உன்னிடமே.

வாடி வதங்கி நீ கிடந்தால்
வண்ணம் காண்பது யாரிடமோ?
நாடி உன்னை நான் வந்தால்
நலிந்து கிடப்பதும ஏன் தானே?

---

# அண்ணுவின் அஞ்சலுக்கு தங்கையின் பதில்

அன்புமிக்க அண்ணுவிற்கு,

வணக்கம்!

உன் கடிதம் கிடைத்தது. கடிதத்தின் முற்பகுதியில் இடம் பெற்ற வாசகங்களைக் கண்ணுற்றுக் கலங்கினேன். 24—6—62-ல் எழுதிய இக் கடிதத்தின் மூலம் என் மனதிலும் அடங்காத சுதந்திர வேட்கையைக் கிளர்ந்தெழச் செய்து விட்டாய். நான் முன்பு விதியின் விளையாட்டு என்று கூறியது தவறுதான். "அந்நிய மொழியில், நாகரிகத்தில் நாம் வைத்த ஆசை என்ற விபரீத வித்துத்தான் செந்தமிழன்னையின் சிறப்பான வாழ்வை அழித்தது" என்று நான் இப்போ ஆயிரமாயிரம் முறை அஞ்சாமல் கூறுவேன்.

அண்ணு, உன் கடிதம் கண்ட நாள் முதல் என்னுள்ளம் சுதந்திர தாகத்தினுல் தவிக்கிறது; அன்னையின் அடிமைத்தளை நீக்கத் துடிக்கிறது. கால்கள் விடுதலைப் பாசறை நோக்கிச் செல்லத் தவிக்கின்றன. நாட்டைக் காக்கத் "தந்தை"யும் "தளபதி"யும் கிளம்பினுல் போதாது. அவர்களைப்பின் தொடர்ந்து அணியணியாகத் தம்பி, தங்கையரும் போராட்டத்தில் குதிக்க வேண்டும்.

வீர மங்கையர் வாழ்ந்து புகழ்பெற்ற மண்ணில் நாம் தாயின் மானம் காக்கத் தயங்கி நிற்பதா? இல்லை, இல்லை இன்றே எளிமையான வாழ்விற்கு என்னைத் தயார் செய்து கொண்டேன். இன்று இலங்கையை ஆள்பவரே ஒரு பெண்ணுயிருக்கையில் அன்னையைக் காக்க உன் அன்புத்தங்கை அஞ்சாதியப் படவில்லை.

புத்தகத்தை எடுத்தாலும் படுக்கையை நாடினுலும் துயர் படிந்த அன்னையின் சோகமுகம் தான் என் கண் முன்னே சுற்றிச் சுழல்கிறது. எங்கு சென்றாலும் "என்று மடியுமித்த சுதந்திர தாகம்" என்ற சோகக் குரல் என் செவிகளைத் துளைக்கிறது. அண்ணு, இப்போ எனக்குப் பட்டமும் படிப்பும் பெரிதல்ல. பாங்கான சுதந்திர வாழ்வே பெரிது. அறப் போருக்கு என்னுல் ஆயிரமாயிரம் வீரப் பெண்மணிகளை அழைத்துச் செல்ல முடியும். தமிழன் எப்பொழுதுமே தன் மானம் உள்ளவன்தான். முழு விஷயத்தையும் அறியாத நிலையில் அவன் முட்டாளாக இருக்கிறுன். ஒரு முறைக்குப் பலமுறை விஷயத்தை எடுத்துக் கூறியதும் செந்தமிழ் காக்கப் பொங்கி எழுந்திடுவான்.

அண்ணு! நீ கூறிய அரும் பெரும் அறிவுரைகள் சிலவற்றை அறியாதவாறு மனதிற் கொண்டேன். தமிழைக் காத்திடத் தொண்டர் படை திரட்ட நானே தாய்க்குலத்திற்கோர் வழிகாட்டியாக கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற முப்படையும் சூழ்ந்து வீர புறப்பட்டுவிட்டேன். நம் தந்தை செல்வர் உலகறியக் கூறிய உண்மை நீதிகளைத் தான் நானும் என் அக்கை தங்கைகளுக்கு எடுத்துக் கூறி அவர்களை அன்பு வழியில் அறப்போருக்கு அழைக்கப் போகிறேன்.

அண்ணு, ஆடவர்களை அறப்போருக்கு அலையலையாகத் திரண்டெழச் செய்வதில் நீயும வெற்றி கண்டிட வேண்டும். "தந்தை"க்காக வல்லப் போராட்டம் எமக்காகத்தான். இதை மனதிற் கொண்டிட வேண்டும். அவர் நமக்கொரு "கலங்கரை விளக்கு" நாம் அந்தக் கலங்கரை விளக்கு உமிழும் ஒளியைப் பின்பற்றும் கப்பலென வெற்றியெனும் கரையை வீரமுடன் அடைந்திட வேண்டும். நம் கப்பல்கள் அன்பு, அகிம்சை என்ற துடுப்புக்களினுல்தான் வலிக்கப்பட வேண்டும். போராட்டக் கடலில் கப்பலைக் கவிழ்க்கவரும் கடற் பிராணிகள் போன்று எம்மைக் கொடுமைப் படுத்தும் கயவர் கூட்டமும், அலைகள் மோதியடிப்பது போல் ஆட்சியாளரின் அடக்கு முறைகளும் இருக்கத்தான் செய்யும். இதை நான் மனதிற் கொண்டு போராட்டத்திற்குத் தயாராகிவிட்டேன். எங்கள் அடிமை மோகம் மடிவதற்குரிய காலம் சமீபித்து விட்டது.

பெண்கள் நாம் பொங்கி எழுவோம்! பைந்தமிழ் காக்கப் போராட்டத்தில் குதித்திடுவோம்!

வாழ்க தமிழ்!

வெல்க நமது போராட்டம்!!

வணக்கம்

உன் அன்புத்தங்கை,

"சிந்தனைச் செல்வி"

---

## வளர்மதி புதிய மருமக்கள்

3436 சுசீலா வைத்திலிங்கம், பதுளை.

3437 வே. இலட்சுமணன், இரததோட்டை.

3438 சு. கனகலிங்கம், கொண்டாவில்.

3439 சி. லெட்சுமணன், கொழும்பு-13.

3440 இரா. சண்முகம், நுவரெலியா.

3441 எம். மரகதம், இறக்குவானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## திருமலைக் கடற் படை ஸ்தல இந்து சமய பரிபாலன சபை

திருகோணமலை கடற் படை ஸ்தல இந்து சமய பரிபாலன சபையின் இரண்டாவது வருடாந்தக் கூட்டம் 21—6—62 வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் கடற்படை சிவிலியன் விளையாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

காரியதரிசியினதும் தனாதிகாரியினதும் அறிக்கைகள் வாசிக்கப்பட்டபின், கடந்த கால நிர்வாகம் திறமையாக நடாத்தப்பட்டதை சபை ஏகமனதாகப்பாராட்டியது.

பின்வரும் உத்தியோகஸ்தர் தெரிவு செய்யப்பட்டார்கள்:

தலைவர்: நல்லையா, உபதலைவர்: சு. விசுவநாதன், இணை காரியதரிசிகள்: வி. பொன்னம்பலம், வ. தயரத்தினம், உபகாரியதரிசி: க. குட்டித்தம்பி, தனாதிகாரி: கு. கதிர்காமசாமி, கணக்குப் பரிசோதகர்: வி. பத்மராசா.

மற்றும் 18 பேரைக் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

கூட்டம் பக்திப் பாடல்களுடன் ஆரம்பமாகிப் பக்திப் பாடல்களுடன் முடிவடைந்தது.

## நாடக ஆரம்ப விழா

கொழும்பு யாழ் கலை அரங்கத்தின் இரண்டாவது நாடக மாகிய 'ஒன்றே குலம்' ஆரம்ப விழா, பண்டாரநாயகா மாவத்தையிலுள்ள கணபதி வித்தியாலயத்தில் 24-6-62 ஞாயிற்றுக்கிழமை வித்துவான் இ. சி. சோதிநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கு வருகை அளித்தவர்களை மன்றச் செயலாளர் திரு. நா. வீரசிங்கம் வரவேற்புரை கூறி வரவேற்ருர். சிற்றுண்டியுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

## ஆசிரியருக்கு வரவேற்புபசாரம்

சாம்பல்தீவு திவ்விய ஜீவன சங்க கிளையினுல் உப்புவெளி இற்ரூலியன் கேம்பில் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு எஸ். செல்லத்துரை அவர்களுக்கும் அவரின் பாரியாரான திருமதி சந்திரலேகாவுக்கும் ஓர் வரவேற்பு உபசாரம் அளிக்கப்பட்டது. அத்துடன் அன்பளிப்புகளும் கொடுக்கப்பட்டன. செல்வி இராஜேஸ்வரி அவர்கள் இசைக்கச்சேரி நடாத்தினர். கூட்டு பிரார்த்தனையின் பின் வைத்திய கலாநிதி திரு ஆ. சின்னத்துரை அவர்கள் ஆசிரியர் செல்லத்துரையின் ஆத்மிக சேவையைப் பாராட்டிப் பேசினர். சாம்பல்தீவு கி. ச. தலைவர் திரு. வ. நாகம்பிரகாசா 'அரசியலும் ஆத்மிக சேவையும்' என்னும் பொருள் பற்றிப் பேசினர். திருமதி செல்லத்துரை செல்வி இராஜேஸ்வரிக்கு இசைக் கருவிஒன்றைப் பரிசளித்தார். திரு வி. செல்லத்துரை ஆசிரியர், தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்தார். இவ்வைபவத்திற்கு முன்னுள் உப தபால் கந்தோர் அதிபர் திரு. கு. தம்பஐயா தலைமை தாங்கினுர்.

## புது உத்தியோகத்தர் தெரிவு

17-6-62 அன்று நடைபெற்ற வளர்மதி கலை மன்றத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவுப் பொதுக் கூட்டத்தில் பின்வரும் புதிய உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டார்கள்:

போஷகர்: திரு. ஏ. நடராசா, தலைவர்: ந. ஐயநாதன், உபதலைவர்: மா. செல்வகுருநாதன், செயலாளர்: ஆ. கருணைரத்தினம், உதவிச் செயலாளர்: டி. சுப்பிரமணியம், பொருளாளர்: நா. மகேசன், உதவிப் பொருளாளர்: க. சிவநாதன், நிர்வாகக் குழு அங்கத்தினர்: திருமதி சுபத்திரா, கருணைரத்தினம், செல்வி இ. வேலாயுதம், கணக்குப் பரிசோதகர்: லோறன்ஸ் அரியநாயகம்.

## சீர்திருத்தத் திருமணம்

அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்க உறுப்பினரான, வெள்ளவத்தையைச் சேர்ந்த, திரு. ம. கணபதிக்கும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி ச. இராசாத்திக்கும் 17-6-62 ஞாயிற்றுக்கிழமை மாலை பம்பலப்பிட்டி, சரஸ்வதி மண்டபத்தில் சீர்திருத்த முறையில் திருமணம் நடைபெற்றது.

அ. இ. ப. இ. பொதுச் செயலாளர் ஆ. வேலாயுதம் அவர்கள் திருமணத்தை நடத்தினர்.

திரு. ஆர். சிவகுருநாதன், அ. இ. ப. இ. தலைவர் திரு. ந. பொ. ந. அரசன், திரு. ம. க. ஈழவேந்தன், "சங்கம்" ஆசிரியர் திரு. மா. சே. அருள் ஆகியோர் சீர்திருத்த திருமணத்தை ஆதரித்துச் சொற்பெருக்காற்றி, மணமக்களை வாழ்த்தினர்.

ந. பொ. அரசன் அவர்கள் மணமக்களை வாழ்த்துகையில் "பொன்னுரை நம் பழம் பெரும் இனிய இன்பத் தமிழ் மொழி இருக்க, புரியாத சமக்கிருத மொழியில் அக்கினி முன் அமர்ந்து, அம்மி மிதித்து, அருந்ததியென்று ஆகாயத்தைப் பார்க்கும், புரியாத சடங்குகள் அவசியமா? இங்கே நடைபெறும் எளிய முறைத் தமிழ் முறைத் திருமணம் எல்லோருக்கும் புரிந்ததல்லவா? பண்டைத் தமிழகத்தில், ஆரியம் தமிழகத்தில் புகு முன் இத்தகைய திருமணங்கள் தான் நடந்தன, தமிழ் மரபும் இதுதான்" என்று சொன்னுர்.

## இ. தி. மு. கவின் செயற்குழுக் கூட்டம்

கிரிமிட்டியா, பீக்டவிலுள்ள இ. தி. மு. க. செயற் குழு கடந்த 16-6-62 சனிக்கிழமை இ. தி. மு. க. பணிமனையில் தோழர் ஆர். ஏ. அருணசலம் தலைமையில் நடைபெற்றது.

கழகத்தின் கொள்கைகளைப் பற்றியும், திட்டங்களைப் பற்றியும் தோழர் அருணசலம் தலைமையுரையில் விளக்கிக் கூறினர்.

கிளைச் செயலாளர் தோழர் எம். பி. சின்னையா பேசிய பொழுது, "சுமார் 10 லட்சம் தொழிலாளர்கள் மலை நாட்டில் வசிக்கிறோம். இவர்களைப் பல தொழிற்சங்கங்கள் கூறு போட்டு இருக்கின்றன. நாம் என்று ஒரே சங்கத்தின் கீழ் சேர்கின்றோமோ அன்று தான் பறிக்கப்பெற்ற நமது உரிமைகளை நாம் பெற முடியும் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். தொழிலாளர்களைப் பலவாறு கூறு போட்டு ஏமாற்றும் தொழிற் சங்கத் தலைவர்களின் நடவடிக்கைகள் வெறும் கேலிக் கூத்தாகவே இருக்கின்றன" என்று குறிப்பிட்டார். மற்றும் துணைச் செயலாளர் சின்னத்தம்பி, தோழர் நாயர் ஆகியோர் பேசிய பின், தலைவர் முடிவுரையோடு கூட்டம் முடிவுற்றது.

## கல்முனை முன்னேற்றச் சங்கம்

17-6-62 ஞாயிறு பி. ப. 6 மணியளவில் மேற்படி சங்கப் பொதுக் கூட்டம் கல்முனை கத்தோலிக்க வாசிகசாலை மண்டபத்தில் தலைவர் திரு. தோ. அந்தோனிப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தமது உரையில் இரண்டு ஆண்டுகளாகச் சங்கம் ஆற்றிய பணிகளைக் குறிப்பிட்டார்.

பின்னர் செயலாளரால் அறிக்கை வாசிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உத்தியோகத் தெரிவின் போது திரு. தோ. அந்தோனிப் பிள்ளை தலைவராகவும், திரு. மாணிக்கம் செயலாளராகவும், திரு. ஐ. பொன்னையா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். ஒன்பது பேர் கொண்ட திருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## சைவ விழா செய்தி படக் காட்சி

ஈழநாட்டின் தலை சிறந்த சைவாலயங்களான திருக்கேதீச்சர ஆலயம், நல்லூர் முருகன் தேவஸ்தானம், நயினை நாகேஸ்வரி அம்மன் ஆலயம், கொழும்பு பொன்னம்பலவாணேசர் ஆலயம், ஸ்ரீபால செல்வ விநாயகராலயம், ஸ்ரீ சிவசுப்பிரமணியராலயம், போன்ற பல சைவாலயங்களின் விழாக்களையும் கொழும்பில் அண்மையில் நடைபெற்ற திருமுறை விழா, நாடக விழா, அகில இலங்கை எழுத்தாளர் மகாநாடு, சீனு தேசத்திலிருந்து அண்மையில் ஈழ நாட்டிற்கு விடயம் செய்த சர்க்கஸ் விளையாட்டுக் கோஷ்டியினரின் விளையாட்டுகளையும் இன்னும் பல அரிய பரத நாட்டிய நிகழ்ச்சிகளையும், கைத் தொழிற் பயிற்சிகளையும் கொண்ட படக் காட்சியொன்று ஊர்காவற்றுறை கரம்பன் மேற்கு முருக மூர்த்தி கோவில் முன்றலில் கரம்பன் சைவ மகாசபை ஆதரவில் சபைத் தலைவர் முதலியார் குலசபாநாதன் தலைமையில் காண்பிக்கப்பட்டது. சபைச் செயலாளர் திரு. ச. சுப்பையா தக்க முறையில் சகல ஏற்பாடுகளையும் செய்தமை பாராட்டுதற்குரியது.

## சுவாமி விபுலானந்தர் காட்டிய வழி

மட்டக்களப்பு காரைதீவில் தோன்றிய சுவாமி விபுலானந்தர், ஈழத்தின் கல்விக்காக, குறிப்பாகத் தமிழரது கலாச்சார மேம்பாட்டுக்காக உழைத்த காரணத்தால் அவரை நாம் மறக்க முடியாது. தமிழ் பேசும் மக்கள் இன்றைய ஆட்சியாளர் மத்தியில் படும் இன்ப நரக வேதனையில் இருந்து மீள வேண்டுமானுல், சுவாமி விபுலானந்தரின் பரந்த மனப்பான்மையுடன் கூடிய வேற்றுமை [illegible] தமிழைக் காத்தான், மட்டக்களப்பான் என்ற பிரிவு மனப்பான்மை சுவாமி விபுலானந்தர் மத்தியில் இருந்திருந்தால் "யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபி விருத்திச்" சங்கத்தை ஆரம்பித் திருப்பாரா என்ற கேள்வியை ஒவ்வொரு பிரித்துப் பேசும் தமிழனும் சிந்தித்துப் பார்க்கட்டும்; திருந்தட்டும்.

மேற்கண்டவாறு விபுலானந்தர் கழக மண்டபத்தில் நடந்த விபுலானந்தர் கழக நான்காவது ஆண்டு பேரவைக்குத் தலைமை வகித்த திருமலை நகராண்மைக் கழக உறுப்பினர் திரு. சோமசுந்தரம் பேசினர். பின்வரும் புது வருட உத்தியோகத்தர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

போஷகர்கள்: திரு. செ. இராசதுரை, எம். பி. திரு. எம். கே. செல்வராசா, திரு. பா. நேமிநாதன், தலைவர்: திரு. இ. சோமசுந்தரம், செயலாளர்: திரு. க. முருகானந்தம், பொருளாளர்: திரு. சி. பத்மநாதன்.

ஐவரைக்கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## கிரான இ. மு. கழகத்தின் நாடகம்

கிரான் இளைஞர் முற்போக்குக் கழகத்தினர் 17-6-62 கல்லூர் மு. கருணுநிதியின் "தூக்கு மேடை" என்னும் சமூக நாடகத்தை இரண்டாவது தடவையாக மேடையேற்றினர். சி. குமரகுரு, சா. கனகசிங்கம் (பொன்னனி), கி. அரசரெட்ணம் அ. பூபாலபிள்ளை, வ. குணசேகரம் முதலியோர் முறையே பாண்டியன், மேனி, அபிநயசுந்தரர், பரமார்த்திகர், தலைமை ஆசிரியர் பாத்திரங்களைத் தாங்கி சிறப்புடன் நடித்து அநேகரின் பாராட்டுகளைப் பெற்றனர்.

அர்த்தநாரியாக நடித்த க. சின்னத்தம்பியும், வக்கீல் வஜ்ரவேலாக நடித்த வி. கருணுகரன் ஜெ. பி. அவர்களும் நாடகத்தின் உயிரோட்டத்திற்குக் காரணமாக-இருந்தனர். இளைஞர் முற்போக்குக் கழகத்தினரின் முயற்சியை திரு. கே. சவுந்தரராஜா (ஆசிரியர்) அவர்களும் திரு. எஸ். சிவலிங்கம் (ஆசிரியர்) அவர்களும் பாராட்டினர். இக்கழகச் செயலாளரான "பொன்னனி" அவர்கள் மீண்டும் ஒரு சமூக நாடகத்தை நடித்துக் காட்ட ஏற்பாடு செய்து வருகிறர்.

## கிழக்கிலங்கை பொதுநல சேவைச் சங்கம்

கிழக்கிலங்கை பொதுநல சேவைச் சங்கம் பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது:

(1) உள்ளூர் முட்டைகளைப் பெருக்குதற்கு கோழி வளர்ப்பை அதிகரிப்பதற்கும், அதன்பயனக வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் அரசாங்கம் உத்தரவாத விலைத் திட்டம் ஒன்றை அமைக்க வேண்டும் என கிழக்கிலங்கை பொது நல சேவைச் சங்கம் அபிப்பிராயப்படுகிறது.

(2) விவசாய கால்நடைக் காட்சிகளை மட்டக்களப்பில் காண்பிப்பதற்கு விவசாயப் பகுதியை கேட்டுக்கொள்கிறது.

(3) [illegible] முதலியவற்றை மட்டக்களப்பு மாவட்ட விவசாயக் கந்தோரில் சேமித்து வைக்கும்படி விவசாயப் பகுதி அதிபரை கேட்டுக் கொள்கிறது.

(4) தாமதமின்றி மட்டக்களப்பிலும் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியைத் திறந்து வைக்கும்படி கௌரவ கல்வி ஒலிபரப்பு மந்திரியை கேட்டுக்கொள்கிறது.

(5) வாக்களித்தபடி மேலும் தாமதமின்றி கடுகதிப் புகையிரதச் சேவையை மட்டக்களப்புக்கு ஆரம்பித்து வைக்கும்படி கௌரவ போக்குவரத்து மந்திரியை கேட்டுக் கொள்கிறது.

(6) மட்டக்களப்பிலுள்ள பிரதேச இ. போ. ச. காரியாலயத்தை வேறு இடத்துக்கு மாற்றுஞ் செய்யாதபடி கௌரவ தொழில் தேசிய சேவை மந்திரியையும் இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலைவரையும் கேட்டுக் கொள்கிறது.

இத்தீர்மானங்கள் நிருவாகக் குழுவினுல் அங்கீகரிக்கப்பட்டு அவ்வவற்றுக்குரிய அரசாங்கப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று பொதுச்செயலாளர் மு. அரசரத்தினம் அவர்கள் தெரிவிக்கின்றர்.


# இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விபரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

## சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவர் (குமபனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை)

மொடான் (பதுளை) விஜிதா (ஹட்டன்)



* எஸ். எஸ். ராஜேந்திரன்
* ஆர். விஜயகுமாரி
* எம். ஆர். ராதா
* சௌகார் ஜானகி

மற்றும் பலர் நடித்த

மாடர்ன் தியேட்டர்ஸ்

குமுதம்

சங்கீதம்: K. V. மஹாதேவன் டைரக்ஷன்: A. சுப்பாராவ்

விரைவில் எதிர்பாருங்கள் சிலிமாஸ் திரைகளில்!



என். டி. ராமராவ்—அஞ்சலிதேவி
எஸ். வி. ரங்கராவ்
மற்றும் பலர் நடித்த

பட்டி
விக்ரமாதித்தன்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)—தாஜ்மஹால் (மாத்தளை)—றீகல் (நுவரெலியா)

றேயல் (பண்டாரவளை) குமரன் (மன்னார்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்) நடராசா (நீர்கொழும்பு)

இம்பீரியல் (குருநாகல்)

பிரேம் நசீர்
விஜயலட்சுமி
எம். என். ராஜம்
கே. ஏ. தங்கவேலு
பிரண்ட் ராமசாமி, எம். சரோஜா
டி. கே. ராமச்சந்திரன், குமுதினி
முதலியோர் நடித்த

பின்னணி பாடியவர்கள்:-
திருச்சி லோகநாதன்
சீர்காழி கோவிந்தராஜன்,
ஜிக்கி, ராஜேஸ்வரி.



பிரண்ட் பிக்சர்ஸ் அளிக்கும்
தங்கம் மனசு தங்கம்
டைரக்ஷன்: R. M. கிருஷ்ணசாமி

விரைவில் எதிர்பாருங்கள்!
சிலோன் தியேட்டர்ஸ் ஸ்தாபனத்தாரின் திரைகளில்
மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன் எம். என். ராஜகுமாரி—நடிகவேள் எம். ஆர். ராதா—நம்பியார்
ஆகியோர் நடிக்கும்



நல்லவன் வாழ்வான்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சென்ட்ரல் [மருதானை]

தினசரி பிற்பகல் 3-15, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு

நிகரற்ற பொழுதுபோக்கு......திரையில் என்றுமே
கண்டிராத விறு விறுப்பு நிறைந்த காட்சிகள்!
மிகப் பிரமாண்டமான தயாரிப்பு!

விக்டர் மச்சூர் — ஹெடி லமார்
ஜோர்ஜ் சாண்டெர்ஸ்
நடிக்கும்
செஸில் பி. டி. மில்லின்

சாம்ஸனும் டிலைலாவும்
(டெக்னிக் கலர்)

விரைவில்
எதிர்பாருங்கள்!
சிலோன் என்டர்ரெயின்மன்ட்ஸ் ஸ்தாபனத்தாரின் திரைகளில்!

சிவாஜி கணேசன்
ஜமுனா, கண்ணாம்பா
நடிக்கும்

நிச்சய தாம்பூலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ... கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194[illegible], இலக்கத்தில் 1962-ம் வருடம் ஜூலை மாதம் 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.